3705

PREFACE TO THE SECOND EDITION.

The first edition of this book was brought out in 1914 and it is only after a lapse of 6 years that the opportunity came for bringing out the second. I am led to think that it is more owing to want of proper advertisement than want of appreciation of the book, that has resulted in the slow but steady sale of the first edition. It was the desire of my uncle, the late Mr. K. Venkatarama Aiyar, that the plays of Shakespeare should be read both by the pupils of the lower and higher classes, and it is only with that object that the prose version of some of the Shakespeare's plays and the full translation of his original dramas were written by him. It is my earnest wish that the non-English knowing public may also be benefitted by reading the translations of the works of such an unparalleled poet as Shakespeare.

I owe a deep debt of gratitude to the Headmasters of the Madura High Schools and to Mr. T. Krishnaswami Aiyar, the publisher, who out of respect for my departed uncle, unhesitatingly undertook to publish this and his many other works, without taking into consideration the considerable expense that he had to incur at the outset, especially at this period when there is a regular paper famine.

12th August 1920.

G. BALASUBRAHMANYAM
Cashier,
The Union Bank, Ltd., Kumbakonam.

ஷேக்ஸ்பியர் எழுதின
வெனிஸ் வர்த்தகன் கதை.

இத்தாலியா தேசத்தில் வெனிஸ் என்னுங் கீர்த்தி பெற்ற நகரமொன்றுளது. முன் காலத்தில் வெனிஸ் நகரவாஸிகள் வாணிபத்தில் மிகுந்த பொருள்தேடித் தம்மூரில் மாடமாளிகைகளையும், கோவில்களையுங் கட்டிப் பெரும் புகழடைந்தவர். வெனிஸில் வீதிகளின் ஸ்தானத்தில் கால்வாய்களே அமைந்துள்ளன. ஜனங்கள் நகரத்தின் ஒரு பக்கத்திலிருந்து மற்றோர் பக்கம்போக விரும்பினால் தோணிகளிலேயே போய்வரவேண்டும் கடற்கரையோரத்திலிருப்பதனால் இன்றும் அவ்வாறுதான் வெனிஸ் இருக்கிறது. புராதனருடைய நாகரீகத்தின் அளவை நவீனர் கண்டு வியக்குமாறு அவாலமைக்கப் பெற்ற கட்டிடங்களும் சித்திரச்சாலைகளும் இறையும் எவரும் பார்த்து வியக்கத்தக்கன.

இக்கதையிற் சொல்லிய விஷயங்கள் சுமார் 500 வருஷங்களுக்குமுன் நடந்தவை என்னலாம். வெனிஸ் நகரம் அக்காலத்தில் பல மதஸ்தர்களாற் குடியேறப்பட்டிருந்தது. கிறிஸ்தவர் பெரும்பான்மையர். எல்லாத்துறைத்தன அதிகாரங்களையும் கிறிஸ்தவரே வகித்துவந்தனர். சட்டதிட்டங்கள் கிறிஸ்தவர்களுக்கு அனுகூலமாயும் அன்னிய மதஸ்தர்களுக்குக் கொஞ்சம் கடுமையாகவுமே ஏற்பட்டிருந்தன. வியாபாரிகள் எப்போதும் சரக்குகளிலேயே தமது முதலைப் போட்டிருப்பார்கள். அவஸரத்திற்கு ரொக்கப்பணம்

வேண்டுமானால் வியாபாரிகளிடத்தில் அகப்படுவது சிறிது கஷ்டம். ஸமயங்களில் அதிக வட்டிக்குப்பணம் ரொக்கமாகக்கொடுக்க ஒருஜாதியார் வெனிஸில் இருந்தார். அவர்களுக்கு யூதர் (Jews) என்று பெயர். பல காரணங்களை முன்னிட்டு யூதரும் கிறிஸ்தவரும் ஜன்மதவேஷிகளாயிருந்தார்கள். மதபேதம் ஒரு காரணம்; மற்றொன்று அநியாய வட்டி வாங்குதல். யூதர் கிறிஸ்தவர் செய்யுங் கொடுமைகளை லக்ஷ்யம் செய்யாமலிருந்ததற்குக் காரணம் எவருமறியலாகும். அவமதிப்பைப் பொருள் செய்தால் பொருள் சேர்வது கஷ்டம். பொருளீட்டலே தாமுயிரோடிருந்ததுக்கு ஏற்பட்டவேலை என்று நிச்சயஞ்செய்திருப்பவர் அவமதிப்பினால் மனம் கோவாரெனின் காரியஸித்தி பெறார். வெனிஸிலுள்ள யூதரும் அக்காலத்தில் பணத்தேட்டத்தைப் பெரிதாயும் அவமதிப்பைச் சிறிதாயுமே எண்ணினவராயிருந்தனர். ஸமயம் வந்தால் கிறிஸ்தவரை ஓட்டாண்டியாயடிக்க முயற்சிசெய்வார்.

இத்தன்மைய வெனிஸ் நகரத்தில் ஷைலக் என்னும் யூதன் ஒருவனிருந்தான். இவனுக்குத் தெய்வம் பணமே. அநியாய வட்டி வாங்குவதனால் எல்லோராலும் வெறுக்கப்பட்டான். இவனை மற்றவரைவிட அதிகமாக வெறுத்தவன் அந்தோனியோ என்னும் கிறிஸ்தவ வியாபாரி. அந்தோனியோவினுடைய நற்குண நற்செய்கைகளே ஒரு புராணமாகும். பிறர் கஷ்டப்படுவதைக் கண்ணுற் பார்க்கவும் ஸகிக்கமாட்டான். பிறர் துன்பத்தை நீக்கத் தன் பொருளையெல்லாம் கொடுக்கவரினும் கொடுத்துவிடுவான். பிராணனைப் பெரிதாக நினைத்தவனல்லன். தன் உடல்

பொருள், ஆவி மூன்றையும் அன்னியருக்கு உதவிசெய்யும் பொருட்டுக் கைவிடுவான்.

ஷைலக் ஈரமில்லா நெஞ்சத்தனாய் ஏழைகளிடத்தில் இரக்கம் வையாமல் வட்டிக்கும் முதலுக்கும் வழக்காடித் துன்பஞ்செய்வதை அறிந்தபோதெல்லாம் அந்தோனியோ அவனைத்திட்டுவான். காய்விற்ற காசென்று குலைத்துக் காட்டாது என்னும் நியாயத்தைக் கைக்கொண்டு கிறிஸ்தவருடைய தீயசொற்களை மனத்தில் வாங்காமல் பொருள் சேர்ப்பதிலேயே புத்தியைச் செலுத்துவான். அந்தோனியோ ஷைலக்கை "யூதநாய், யூதப்பேய்" என்று பலமுறை அவனுக்கெதிரிலேயே திட்டுவான். ஷைலக் சிரக்கம்பனம் பண்ணிக்கொண்டு வாய்பேசாமற் போய்விடுவான். ஆயினும், அந்தோனியோ கையிலகப்பட்டால் அவனுயிரை வாங்கிப்போடுகிறதென்று தனக்குள் ஷைலக் உறுதிசெய்திருந்தான்.

அந்தோனியோவுக்குப் பிராண சினேகிதன் பஸானியோ என்று ஒருவனிருந்தான். பஸானியோ உயர்குலத்திற் பிறந்தவன்; யவ்வனகாலத்தில் சிறு பிள்ளைகளுக்குப் பணத்தின் அருமை தெரியாதல்லவா? பஸானியோவுக்குப் பிதா கொடுத்திருந்த சொத்துக்களெல்லாம் செலவாய் விட்டது. கையிற் காசுமில்லை, முகத்தில் பவுஷுமில்லை என்றபடி பஸானியோ தன் இல்லாமையை நினைந்துவருந்துவான். அக்காலங்களில் அந்தோனியோ பஸானியோவுக்குப் போதுமான பொருளுதவிபுரிந்து அவனை மகிழ்விப்பான். பஸானியோவின் குறிப்பறிந்தே அந்தோனியோ ஒத்தாசை செய்துவந்தான். வெனிஸ்வாஸிகள் பஸா

னியோவும் அந்தோனியோவும் ஒரே மனஸும் ஒரே பணப்பையும் உடையவர்கள் என்று சொல்வார்கள் கண்பன் என்றால் அந்தோனியோவைப் போலிருக்கவேண்டும். வாய் வாழைப்பழமாயும், கை கருணைக்கிழங்காகவு மிருந்தலால் பயனென்ன ?

தான் வீண்செலவு செய்து அழித்துவிட்ட பொருளைத் திரும்பவும் ஸம்பாதிக்கவேண்டுமென்ற ஆசை பஸானியோவுக்குப் பிறந்தது பஸானியோ இலக்குவைத்த இடமும் ஸரியான இடந்தான். பெல்மான்டு என்னும் ஊரில் ஒரு கன்னி இருந்தாள். அவள் பிதா அவளுக்கு தரித்ர ஹதமான சொத்துக்களை வைத்துவிட்டு இறந்துபோனார் அவளுக்கேற்ற பர்த்தாவை ஸ்வயமாக மணம்புரியலாமென்றும் அவள் பிதா அனுமதி தந்திருந்தார். பணக்காரப்பெண் அவலக்ஷணமாயிருந்தாலும் கலியாணம் பண்ணிக்கொள்ள எவ்வளவோபேர் ஸம்மதிப்பர். அழகும், குணமும், பொருளும் நிறைந்த பெண்ணைக்கவர எவர்தாம் முயற்சிசெய்யார். அந்தக் கன்னியின் பெயர் போர்ஷியா. குலத்திலும் கல்வியிலும் அந்த நாட்டிலிருந்த பெண்களுக்கு எவ்வளவேனும் போர்ஷியா தாழ்ந்தவளல்லள். அனேக ராஜகுமரர்களும் போர்ஷியாவினுடைய ஸௌந்தரியத்தைக் கேட்டும் பார்த்தும் அவளைப் பாணிக்கிரஹணஞ் செய்யவந்தார்கள். போர்ஷியா மனத்திற்கு ஒத்தவராக ஒருவரும் அகப்படாமையால் அவள்சித்தம் சற்றுக்கலங்கிற்று. பஸானியோவை மட்டில் அவள் கடாக்ஷித்ததை அவன் அறிந்து தான் முறைப்படி அவளைக் கலியாணஞ்செய்ய முயன்றால் போர்ஷியா இணங்குவாள் என்று நினைத்தான். மனத்திற்கு மனமே சாக்ஷி என்பது நாயக நாயகிகளுக்குப் புலப்படுவதுபோல

மற்றையோருக்குப் புலப்படாது. போர்ஷியா தன்னையே மணக்க ஸம்மதிப்பாள் என்ற உறுதி பஸானியோவுக்கு உண்டாயிருந்தது. போர்ஷியாவைப்போன்ற பணக்காரப் பெண்ணைக் கேட்கப்போகிறவர்களுடைய அந்தஸ்தும் உயர்ந்துதானே இருத்தல்வேண்டும். பஸானியோவுக்குக் குலப்பெருமையே அல்லாமல் பணப்பெருமை எள்ளளவேனுமில்லையென்பதை முன்னமே சொன்னோம்.

பஸானியோ இவ்வாறு மனத்தடுமாற்றம் அடைந்திருக்கும்போது அந்தோனியோவிடத்திற்போய், "மித்ரா, இளங்கன்று பயமறியாதென்றபடி பிதா வைத்திருந்த பொருளையெல்லாம் அழித்துவிட்டேன். துள்ளின மாட்டின் கதியை இப்போதடைந்திருக்கிறேன். நான் திரும்பவும் முன்னுக்குவர ஒரு உபாயம் செய்தேன். பெல்மாண்டு நகரத்தில் போர்ஷியா என்று ஒரு பெண்ணிருக்கின்றாள். அவள் மிகுந்த பணக்காரி: எனக்கு வாழ்க்கைப்பட ஸம்மதமுள்ளவளென்று ஜாடைமாடையாயறிந்திருக்கிறேன். நான் மணக்கோலம்பூண்டு பரிவார ஜனங்களோடு பெல்மாண்டுக்குப் போவேனாயின் கலியாணமாவதிலும் முன்போல நான் தனாட்டியனாவதிலும் ஸந்தேகமில்லை. அதற்காக எனக்கு மூவாயிரம் பொன் தேவையாயிருக்கிறது. நீ எத்தனை முறையோ எனக்கு உபகாரஞ் செய்திருக்கின்றாய். இச்சமயம் எனக்கு மூவாயிரம் பொன் கடனாகக் கொடுப்பையாயின் உனக்கு முன்னிலும் அதிகமாகக் கடமைப்பட்டவனாயிருப்பேன்" என்றான்.

அந்தோனியோ "பஸானியோ, நீ பணங்கேட்டு நான் இல்லையென்ற காலம் இதுகாறுமில்லை. இக்காலம் தெய்வச்

சோதனைபோல என்னிடத்தில் ஒரு தம்பிடியுங்கிடையாது. அதனாலென்ன? சொற்பனத்தில் பணம்வேண்டுமென்றாலும் வட்டிக்குக் கொடுக்க ஷைலக் இருக்கிறான். அவனிடத்தில் இக்ஷணமே போய்ப் பத்திரம் எழுதிக்கொடுத்து உன் மனோபீஷ்டத்தை நிறைவேற்றுவேன். எழுந்திரு, ஷைலக் வீட்டிற்குப்போவோம்" என்றான். வண்டி ஓடத்தில் ஒருகாலம் ஏறினால் ஓடம் மற்றொரு காலம் வண்டியிலேறும். ஷைலக்கை அந்தோனியோ அடிக்கடி நிந்தித்துப் பேசினவனாயினும் காரியத்தை உத்தேசித்துக் கழுதையின் காலைப் பிடித்துக்கொள்வதுபோல அவனிடத்தில் நண்பன் பஸானியோவினுடைய திருப்திக்காகப் போகும்படி நேர்ந்தது.

அந்தோனியோ ஷைலக்கின் வீட்டிற்குப் போய்த் தான் வந்த காரியத்தைச் சொன்னான். ஷைலக்கு வாயுபசாரங்கள் சொல்லி பஸானியோவுக்கும் அந்தோனியோவுக்கும் ஆஸனங்கள் அளித்தபின் "கனவானே, தாம் என்னுடைய குடிசைக்கு வரும்படியான பாக்கியத்தை நான் பெற்றேன் தமக்கு மூவாயிரம் பொன் தேவை என்கின்றீர். எத்தனைமுறை என்னை நாயென்றும் பேயென்றும் தூர்ப்பாஷையாய்ப் பேசியிருக்கின்றீர்? எங்கள் ஜாதிக்கடுத்தபிரகாரம் நான் அவற்றையெல்லாம் பொறுத்திருக்கிறேன். யானைக்கொரு காலம் வந்தால் பூனைக்கும் ஒரு காலம் வருமல்லவா? நாய் மூவாயிரம் பொன் தருமா? பேய்க்குப் பணமேது? தாம் செய்திருக்கிற மரியாதைகளுக்குக் கைம்மாறாகத் தம்முடைய அவசரத்துக்கு நான் உடன் தரவேண்டுமோ" என்று கோபித்தவன்போல் நடித்துப் பேசினான்.

அந்தோனியோ "அடா, ஷைலக், நீ இப்போது பணங்கொடுத்தால் உன்னைத் திட்டமாட்டேனென்று நினையாதே. உன்பணத்துக்கு இஷ்டமான வட்டி போட்டுச் கொள், அதைக்கொடுக்க ஆக்ஷேபமில்லை. முன்போலவே உன்னைத் திட்டிக்கொண்டிருப்பேன். இஷ்டமிருந்தால் கொடு: இல்லாவிட்டாற்போ வேறெங்காவது பார்த்துக் கொள்கிறேன்" என்று துடுக்காய்ச் சொன்னான்.

ஷைலக் ஸ்தாயியிலிருந்து சிறிது கீழிறங்கி "அந்தோனியோ ஐயா, கோபங்கொள்கிறீர்களே: தம்முடைய அவசரத்துக்குப் பயன்படாத பணம் எனக்கென்ன செய்யப் போகிறது? தம்முடைய நட்பை என்றும் விரும்பினவன் இன்றுதான் என் ஜன்மம் ஸபலமாயிற்று. மூவாயிரம் பொன்னையுங் கொடுக்கிறேன். தம்மிடத்தில் வட்டியுங் கேளேன்" என்றான்.

அந்தோனியோ "அப்படியானால் ஷைலக் நல்லவன் தான்" என்றான்.

ஷைலக் "பிரபுவே, ஒரு சங்கதி மனுப்பண்ணிக் கொள்ளுகிறேன். தாம் மூவாயிரம் பொன்னுக்கும் வட்டி கொடுக்கவேண்டாம், எவ்வளவு தவணை வேண்டுமோ அதைப்பத்திரத்தில் எழுதிக்கொள்ளும் குறித்த தேதியில் முதலைக்கொடுக்கத் தவறுவீரானால் உமது மார்பிலிருந்து ஒரு சேர் மாமிசத்தை நான் அறுத்துக்கொள்ளுகிறதென்கிற நிபந்தனை மாத்திரம் பத்திரத்தில் கண்டிருத்தல் வேண்டும். ஸம்மதமானால் இதோ மூவாயிரம் பொன்னையுங் கட்டிப்போட்டுவிட்டேன்" என்றான்.

அந்தோனியோ கபடியலல. அவன் முதலெல்லாம் கப்பலில் சரக்குருபமாக ஏறியிருந்தது கப்பலுடைந்தால் அந்தோனியோ பாடு திண்டாட்டம்: ஷைலக்குக்குக் கொண்டாட்டம் தீர்க்க ஆலோசனையில்லாமல் இக் கொடிய நிபந்தனையடங்கிய பத்திரத்திற்கு அந்தோனியோ கையொப்பம் வைக்கப்போனான். அப்போது பஸானியோ "மித்ரா, எனக்காக இந்த மாதிரியான பத்திரத்திற்கு நீ கையொப்பமிட நான் உடம்படேன். நண்பனுடைய உயிரினும் என் கலியாணம் முக்கியமானதல்ல. நீ கையொப்பம் வைக்க எனக்குக் கொஞ்சமேனும் இஷ்டமில்லை. நாம் போவோம், வா" என்று கையைப் பிடித்து அந்தோனியோவை இழுத்தான். அந்தோனியோ "தோழா, நீ ஒன்றுந்தெரியாத பிள்ளையாயிருக்கின்றாயே, என் கப்பல்கள் துறைக்கு வந்தால் மூவாயிரம் பொன்னல்ல, மூன்று லக்ஷம் பொன்னும் கொடுத்துக் கடனிறுக்க வல்லேன். நீ தடைசொல்லலாகாது," என்று கூறிப் பத்திரத்திற்குக் கையொப்பம் போட்டு மூவாயிரம் பொன்னையும் பஸானியோ கையிற்கொடுத்து கலியாணத்தை முடித்துவரும்படி சொல்லிவிட்டுத் தன் வீட்டிற்குப் போனான்.

அந்தோனியோ அன்புடனளித்த அரும்பொருளைப் பெற்ற பஸானியோ, கிரேஷியானோ என்னுந் தோழனுடன் தகுந்த பரிவாரங்களோடு மாப்பிள்ளைக் கோலம் பூண்டு பெல்மாண்டுக்குச் சென்றான். போர்ஷியா பஸானியோவையும் அவன் பரிவாரங்களையுந் தக்கபடி உபசரித்தானபின் பஸானியோ தான் வந்த காரியத்தைச் சொன்னான். உத்தமஜாதிப் பெண்ணாகிய போர்ஷிய பஸானி

யோவை நோக்கி, "பிரபுவே, இந்தக்ஷணம் வரையில் இந்த வீடு, இதிலுள்ள ஆள் மாகாணங்கள், என் பிதா எனக்கு வைத்த சொத்துக்கள் எல்லாவற்றிற்கும் நானே அதிகார முடையவளாயிருந்தேன். நான் பேதைப் பெண். எனக்குக் கல்விலேசமுங் கிடையாது. கற்பித்தால் அறிந்துகொள்ளக் கூடாத முதிர்ந்தவயதையுமடைந்தவளல்லள். நானும் என தும் இந்த நிமிஷம் முதற்கொண்டு உமதாய்விட்டோம். என்னைத் தம்முடைய ஆக்ஞைக்கு உட்படுத்தி நடத்தல் வேண்டுமென்று பிரார்த்திக்கிறேன். தம்மை நான் பர்த் தாவாக வரித்ததற்கு அடையாளமாக இந்த மோதிரத்தைத் தமக்குத் தருகின்றேன். நமது ஆயுள் உள்ளவரையில் தாம் இந்த மோதிரத்தைக் கைவிடலாகாது. எந்த அன்புடன் தம்மை பர்த்தாவாக அடைய எண்ணினேனோ அந்த அன் புக்கு ஒருகாலமும் குறைவு வராமல் கடவுள் காப்பாராக" என்றாள்.

பஸானியோ உபசாரவார்த்தைகள் ஏதாவது சொல்ல வேணுமென்று வெகு பிரயத்தனஞ் செய்தான். போர்ஷி யாவின் கருணைநிறைந்த சொற்கள் செவியிற்பட்டபிறகு, பேசுவதற்கு பஸானியோவின் நா எழவில்லை. ஏதோ குழறிப்பேசினான். நன்றியை ஒருவாறு போர்ஷியாவுக்கு அறிவித்தான். போர்ஷியாவின் சேடியில் ஒருத்திக்கு நெறிஸா என்று பெயர். மாப்பிள்ளைத்தோழனான க்ரே ஷானோ என்பவன் தானும் கலியாணஞ் செய்துகொள்ள இஷ்டப்படுவதாகச் சொல்ல, பஸானியோ "பெண்ணகப் பட்டால் தடையென்ன?" என்றுகூற, க்ரேஷானோ "தமது பார்யை அவர்களுடைய சேடிப்பெண் நெறிஸா

என்பவளிடத்தில் என் மனஞ்செல்கின்றது. அவளும் ஸம்மதித்திருக்கிறாள். தாமும் தமது நாயகியும் அனுமதித்தால் இப்போழ்தே விவாகம் முற்றுப்பெறும்,'' என்றான். போர்ஷியா நெறிஸாவைக்கேட்க அவளும் க்ரேஷானோ சொன்னது வாஸ்தவமென்று சொன்னாள். க்ரேஷானோவுக்கும் கலியாணம் நிச்சயமாகி நெறிஸா தன் புருஷனுக்கு ஒரு மோதிரத்தைக் கொடுத்துப் போர்ஷியாவைப்போலவே எச்சரித்தாள். இவ்வாறாக பெல்மாண்டில் கலியாணக் குதூகலங்கள் நடக்குஞ்சமயத்தில் அந்தோனியோவிடத்திலிருந்து பஸானியோவுக்கு ஒருகடிதம் வந்தது. அதைப் படிக்கும்பொழுது பஸானியோவின் முகமலர்ச்சி முற்றிலு மறைந்து துக்கச்சின்னங்களே மிகுந்து காணப்பட்டன. கூர்மையான புத்திசாலியாகிய போர்ஷியா தனது நாயகன் முகமண்டலம் வாடினதற்குக் காரணங்கேட்க பஸானியோ சொல்வானாயினன்:—

"மாதர் அரசே, உயர்குலத்திற்பிறந்தேனென்ற பெருமைமட்டில் எனது. எனக்குப்பொருள் லேசமுங்கிடையாது. கடன் பட்டிருத்தல் இல்லாமையிலுங் கேடானதன்றோ? நான் கடனாளி. என் உயிர்த்தோழனாகிய அந்தோனியோ எனக்காக வாங்கிக்கொடுத்த கடனுக்காகத்தன்னுயிரை இழக்க இருக்கிறான். இதனிலும் துக்கமான ஸமாசாரம் இருத்தலாகுமோ?'' என்று கண்ணீர் சொரிந்து கதறினான். பர்த்தாவிடத்தில் பரம பிரீதிவைத்த போர்ஷியாவென்னும் சீமாட்டி "நாதா, இதற்குத்தானா வருந்துகிறீர்கள்? கடிதத்தை என்னிடத்தில் கொடுங்கள். தமதுநண்பர் எனது நண்பரே. அவர்மேல் காற்றுப்படவும்

நான் உடம்படேன். இதற்கண்ட மூவாயிரம் பொன்னுக்கு முப்பதினாயிரம் பொன்னல்ல, என் சொத்திலிருந்து நாம் எடுத்துக் கொடுத்து நமது நண்பரை இங்கு அழைத்துவரல் வேண்டும். நாம் ஆலயத்துக்குச்சென்று கடவுள் ஸன்னிதியில் வைதிகமான கலியாணச் சடங்குகளை முதலில் முடித்துக்கொள்வோம் அவை முடிந்தாலன்றி என் பொருளைச் செலவிடத் தமக்குச் சாஸ்திரம் இடங்கொடாது. இப்போதே கோவிலுக்குப் போவோம்" என்றாள்.

பஸானியோ, க்ரேஷானோ, போர்ஷியா, நெறிஸா, எல்லோரும் கோயிலுக்குச்சென்று வைதிக முறைப்படி விவாகத்தை முடித்துக்கொண்டு வீட்டுக்குத்திரும்பி வந்தவுடன் போர்ஷியா முப்பதினாயிரம் பொன்னை பஸானியோவிடத்தில் கொடுத்து அவருடன் க்ரேஷானோவையும் வெனிஸ் நகரத்துக்கு அனுப்பினாள்.

தன் புருஷன் வீட்டை விட்டுப்போனது முதல் போர்ஷியாவுக்கு அந்தோனியோவை எப்படியாவது காப்பாற்றவேண்டுமென்ற எண்ணமே மேலிட்டது தன் சேடி நெறிஸாவுடன் ஷைலக்கின் பத்திரத்தைப்பற்றி யோசனை செய்து கொண்டிருந்தாள். போர்ஷியாவின் ஸமீப பந்து ஒருவர் தர்ம சாஸ்திரங்கள் அறிந்த பண்டிதராயும் நியாயாதிபதிகளால் மதிக்கப்பட்டவராயுமிருந்தார். அவர் பெயர் பலாரியோ. போர்ஷியா ஷைலக்குக்கும் அந்தோனியோவுக்கும் நடந்துவரும் வியாஜ்யத்தைப்பற்றிக் கடிதம் எழுதினாள். அவள் கடிதத்தைக் கண்ட க்ஷணமே பலாரியோ சட்ட திட்டங்களை யெல்

லாம் பரிசீலனை செய்து தன் அபிப்பிராயத்தை எழுதி ஒரு கடிதத்தைப் போர்ஷியாவுக்கு அனுப்பினார். அதைச் செவ்வையாய்ப் படித்தபிறகு போர்ஷியா செய்த தீர்மானத்தைக் கேட்கின், சிலர் போர்ஷியாவை 'இவள் பெண்ணல்ல, ஒரு ராக்ஷஸி'' என்பர். இன்னுஞ் சிலர் ''நெஞ்சழுத்தமுள்ளவள்'' என்பர். உலகத்தார் பெரும்பாலாரும் அனேக ஸமயங்களில் வெறியர்போற் பிதற்றுகின்றவராயிருக்கின்றனர். பூததயை பொங்கி வழிகின்ற இருதயமுடைய போர்ஷியாவோ, உலகத்தார் நிந்தனைச் சொல்லுக்கு எள்ளளவேனும் அஞ்சாமல் தானே புருஷ வேஷம் தரித்து தர்ம சாஸ்திரத்தை நியாயாதிபதிகளுக்குச் சொல்லி அந்தோனியோவுக்கு வந்த ஆபத்தை நீக்கிக் காப்பாற்றி விடுகிறதென்று தீர்மானஞ் செய்தாள். நெறிஸாவைத்தன் குமாஸ்தாவாக வேஷம் போட்டுக்கொள்ளச் சொன்னாள். தனக்குப் பால்தஸார் என்று பெயர் வைத்துக்கொண்டாள். பலாரியோவின் கடிதத்தையுமெடுத்துக்கொண்டு இருவரும் ஆண் வேஷதாரிகளாய் வெனிஸ் நகரத்திலுள்ள நியாயஸ்தலத்திற்கு ஷைலக் வியாஜ்யம் விசாரணை ஆரம்பிக்குமுன் போய்ச் சேர்ந்தார்கள்.

நியாயஸ்தலத்தில் நியாயாதிபதியும் அவருடைய பரிவாரங்களும் உச்சஸ்தானத்திலும், அந்தோனியோ, பஸானியோ, க்ரேஷானோ மூவரும் ஒரு பக்கத்திலும், ஷைலக் குரூரப் பார்வையுடன் மற்றோர் பக்கத்திலும், இருப்பதைப் போர்ஷியாவும் நெறிஸாவும் கண்டார்கள். பஸானியோவுக்காவது, க்ரேஷானோவுக்காவது வந்தவர்கள் யாவரென்று

கொஞ்சங்கூடத் தெரியவேயில்லை. இதுவும் ஸ்திரீ ஸாகஸமல்லவா?

போர்ஷியா தான் கொண்டுவந்திருந்த பலாரியோவின் கடிதத்தை நியாயாதிபதியிடத்திற் கொடுக்கவே, அவர் கடிதத்தைப் படிப்பித்துக் கேட்டுப் போர்ஷியாவையே அன்று நியாஜ்யத்தை நடத்தும்படி அனுமதி கொடுத்தார். மீசை முளைக்காத சிறுவன்போற் றோன்றின போர்ஷியா என்ன பேசப்போகிறுளென்று நியாஸ்தலத்திலுள்ளோரனைவரும் ஆவல் கொண்டவர்களா யிருந்தார்கள்.

நியாயஸ்தல உத்யோகஸ்தர் மூலமாய் வாதிப் பிரதிவாதிகள் எவரெவரென்று தெரிந்துகொண்டபின் போர்ஷியா ஷைலக்கை நோக்கி,

உன்னுடைய கடன் பத்திரத்தை முற்றிலும் பார்த்தேன். தவணை தவறினுல் பிரதிவாதியுடைய மார்பிலிருந்து ஒரு சேர் மாமிசம் நீ வெட்டி எடுத்துக்கொள்ளலாமென்றுகண்டிருக்கிறது. பிரதிவாதி அந்தோனியோவும் பத்திரம்வாஸ்தவமென்று ஒத்துக்கொள்ளுகிறுன். ஆயினும் மூவாயிரம் பொன்னுக்கு ஆருயிரம் பொன்னுக வாங்கிக்கொண்டு பத்திரத்தை ரத்துசெய்து விடு. அது தர்மமாயிருக்கும்" என்ருள்.

ஷைலக்கோ அந்தோனியோவுக்கு யமனுக வந்தவன். அவன் சற்றேனும் மனமிளகாமல் "மூவாயிரம் பொன்னுக்கு மூன்றுகோடி பொன் கொடுத்தாலும் நான் வாங்க மாட்டேன், பத்திரத்தின் ஷரத்தில் கண்டபடி ஒரு சேர் மாமிசம் அவனுடலிலிருந்து வெட்டிக்கொள்வதிற்ருன்

எனக்கு இஷ்டம். வீண்பேச்சில் காலங்கழிப்பதினாலாவ தென்ன ?'' என்று கோபமாய்ச் சொன்னான்.

போர்ஷியா—ஷைலக், நாமனைவரும் கடவுளை நோக்கிக் கருணைவைக்கவேண்டுமென்று பிரார்த்திக்கின்றோம். நாம் பிறரிடத்தில் கருணைவைக்காவிட்டால் கடவுள் மாத்திரம் நம்மிடத்தில் கருணைவைப்பாரோ ? கருணையின் பெருமையைச்சிறிதேனும் நீ அறிந்திலை. கொள்பவன் கொடுப்பவன் இருவருக்கும் கருணை நன்மை பயக்குவது. அரசரின் மகுடத்தினும் அவர் கருணையே அவருக்கு உயர்ந்த பூஷணமாகின்றது. இம்மையில் கருணையோடு அரசாக்ஷி செலுத்துபவர் கடவுளுக்கொப்பாவர். நியாயத்துடன் கருணை கலக்காவிட்டால் அது நியாயமாகாது. நீ முதிர்ந்த வயதானவன். கடவுள் கிருபையை நாடுந்தருணம் உனக்கு ஸமீபமாக இருக்கிறது. பத்திர நிபந்தனைப்படி செய்யவேண்டுமென்று நீ சொல்வது நியாயமாயினும் அதில் கருணையின் ஸம்பந்தம் கிஞ்சித்தேனுமில்லை. முதலைப்போல மூன்று மடங்கு பொன்னை வாங்கிக் கொண்டு பத்திரத்தைக் கிழித்துவிட அனுமதி கொடு. அவ்வாறு செய்வதனாலுனக்குச் சேடு ஒன்றும் வராது.

ஷைலக்—என்னுடைய பிரதிக்ஞைக்கு விரோதமாக நான் ஒன்றுஞ்செய்யேன். நீர் தர்மசாஸ்திரங்களைச் செவ்வையாயறிந்தவராயிருக்கின்றீர். எழுத்தினுக்கு விரோதமாக ஒன்றுஞ் செய்யும்படி எனக்குச் சொல்லவேண்டாம்.

போர்ஷியா—அப்படியாயின் பிரதிவாதி தன் மார்பிலிருந்து ஒரு சேர் மாமிசத்தை வெட்டி எடுக்கச் சம்மதிக்க

வேண்டியதுதான். அந்தோனியோ, உனக்கு ஏதாவது சொல்லிக்கொள்ள வேண்டுமோ?

அந்தோனியோ—நான் சொல்லவேண்டுவதொன்று மில்லை. என் பிராணனைக் கவர்வதற்கே வாதி லக்ஷ்யம் வைத்தானென்று முன்னரே அறிவேன். என் மனத்தைத் திடம் பண்ணிக்கொண்டிருக்கிறேன். [பஸானியோவை நோக்கி] மித்ரா, உனக்காக இன்று பிராணனை விடுகிறே னென்று நீ வருத்தப்படலாகாது. பிறருக்குதவாத இவ வுடல் இருக்தென்ன? உன் மனைவியிடத்தில் என் அன் பின் அளவை நீ சொல். நீங்கள் இருவரும் நீடூழி காலம் சுகமாக வாழ்வீர்களாக.

பஸானியோ—என் மனைவியிடத்தில் நான் அன்பு டையவன் என்பது வாஸ்தவம். அவள் எனக்குப்பிராண நாயகிதான். என் மனைவியும் பிராணனும் உன்னினும் உயர்ந்தவையாக நான் எண்ணவில்லை. உன்னைக்காத்தற் பொருட்டு மனைவியையும் பிராணனையும் துறப்பேன்.

போர்ஷியா—தம்முடைய மனைவி பக்கத்தில் இத் தருணம் இருப்பாளாயின் தம்மைச் சும்மாவிடாள்.

க்ரேஷ்யானோ—எனக்கும் ஒரு மனைவியிருக்கிறாள். அவள் இந்த நிமிஷமே இறந்து சொர்க்கஞ்சென்று அங் குள்ள தெய்வங்களைப் பிரார்த்திப்பதினால் வைஷலக் மனம் இளகுமானால் நான் பெரும்பேறடைந்தவனாக எண்ணு வேன்.

நெரிஸா—இவ்வாறு நீர் பேசுவதை உமது மனை யாள் கேட்டால் வீடு இரண்டு பட்டுப்போமென்பதிற் சந்தேகமே யில்லை.

ஷைலக்—இது என்ன வீண்பேச்சு ?

போர்ஷியா—நியாயப்படி ஒரு சேர் மாமிசம் உன்னதே.

ஷைலக்—தாம் தர்மராஜாவின் அவதாரமே ?

போர்ஷியா—தராசு கையிலிருக்கிறதா ?

ஷைலக்—இதோ பாருங்கள் : தயாராய் வைத்திருக்கிறேன்.

போர்ஷியா—ஒரு இரண வைத்யனைக் கிட்ட வைத்துக்கொள். உதிரப்போக்கினுல் பிரதிவாதி உயிரிழப்பினும் இழக்கலாம்.

ஷைலக்—இரண வைத்யனைப் பக்கத்தில் வைத்துக்கொள்ளவேண்டுமென்று பத்திரத்தில் காணவில்லை, நான் வைத்துக்கொள்ள மாட்டேன்.

போர்ஷியா—பத்திரத்திற் காணவிடில் என்ன? தருமத்திற்கு அவ்வளவு நீ செய்தலாகாதோ ?

ஷைலக்—தர்மம் என்றபேச்சை என்னிடம் சொல்ல வேண்டாம்.

போர்ஷியா—கடைசியாக ஒருமுறை கேட்கிறேன். ஒன்பதினுயிரம் பொன் வாங்கிக்கொண்டு பிரதிவாதியைத் துன்பம் செய்யாமல் விடுவதில் உனக்கிஷ்டமில்லையென்பது உறுதிதானே ?

ஷைலக்—அதுவே உறுதி.

வெகு ஆவலோடு ஷைலக் அந்தோனியோவின் மார்பைப் பிளக்கக் கத்தியைத் நீட்டினுன். இந்த ஸமயத்தில்

3

போர்ஷியா ஷைலக்கை நோக்கி " ஷைலக், உன் பத்திரத்தில் ஒரு சேர் மாமிசம் மாத்திரம் எழுதப்பட்டுள்ளது. இரத்தம் சொல்லப்படவில்லை. அந்தோனியோ கிறிஸ்தவன். அவனுடலிலிருந்து ஒரு துளி உதிரம் உன்னால் சிந்தப்படுமாயின் உன் பொருளை எல்லாம் நியாயாதிபதி இஷ்டப்படி வினியோகஞ் செய்தலாகும். ஒருசேர் மாமிசத்துக்கு ஒரு மயிர்க்கிடை ஜாஸ்தியாகவாயினும் குறைவாகவாயினும் எடுக்கப்படுமாயின் உனக்கும் மரண தண்டனை விதிக்கப்படும்.

ஷைலக்—[இடி விழுந்தாற்போலப் பிரமித்து], தாம் சொல்வதுதான் சட்டமோ ?

போர்ஷியா—சாஸ்திரத்தை உன் கண்ணுக்கெதிரிற் காட்டுவேன். நீ அந்தோனியோவைக் கொலை செய்ய நினைத்தவன். உன்னைக் கொலை செய்யும்படி சட்டம் சொல்லுகின்றது.

ஷைலக்—ஒன்பதினாயிரம் பொன் கொடுங்கள். பிரதிவாதியை விட்டுவிடுகிறேன்.

பஸானியோ—இதோ வைத்திருக்கிறேன். எடுத்துக்கொள்.

போர்ஷியா—பணத்தைக் கொடுக்கவேண்டாம். பலமுறை நான் கேட்டபோது பலரும் அறிய ஷைலக் மறுத்துவிட்டான். பத்திரத்தில்கண்ட ஒரு சேர் மாமிசந்தான் அவனது.

ஷைலக்—எனக்கு முதலுங் கொடுக்கமாட்டீர்களா ?

போர்ஷியா—அதைத்தான் வேண்டாமென்றாயே. இது நியாயஸ்தலமென்று நினைத்தாயோ, விளையாட்டுக் கூடமென்று நினைத்தாயோ ?

ஷைலக் தலை தொங்கவிட்டுத் துக்காக்கிராந்தனாய் வீடு சென்றான். அந்தோனியோ தான் உயிர் தப்பினதற்காகப் போர்ஷியாவுக்கு உபசாரஞ்சொன்னான். பஸானியோவும் தன் மனைவி புருஷவேஷம் பூண்டிருந்தாளென்பதை அறியாமலே மூவாயிரம் பொன்னை சிரமதக்ஷிணையாக அவளுக்குத் தரப்போனான். போர்ஷியா பொன்னை வேண்டாமென்று தடுத்து பஸானியோவுக்குத் தான் விவாககாலத்திற்கொடுத்த மோதிரத்தைக் கேட்டாள். பஸானியோ ஸம்மதிக்காமல் போனதால் போர்ஷியா கோபங்கொண்டவள்போல பிரயத்துச்சென்றாள். பஸானியோ மனம் வருந்தி க்ரேஷானோவிடத்தில் மோதிரத்தைக் கொடுத்துப் போர்ஷியாவுக்குக் கொடுக்கச் சொன்னான். க்ரேஷானோ அந்த மோதிரத்தைக் கொடுக்குஞ் சமயத்தில் நெறிஸா க்ரேஷானோவினுடைய மோதிரத்தைக்கேட்க, அவனும் நெறிஸா கொடுத்த மோதிரத்தை அவளிடத்திலேயே கொடுத்தான். இவ்விரண்டு ஸ்திரீகளும் தம்முடைய பர்த்தாக்கள் வீடுவந்து சேருமுன் பெல்மாண்டுக்குப்போக எண்ணி அதிவேகமான குதிரைகள் பூட்டிய வண்டிகளிலேறிக்கொண்டு சென்றார்கள். மோதிர விஷயமாய்த் தமது புருஷர்களுடன் ஊடல் செய்கிறதென்று தமக்குள் உறுதி பண்ணிக்கொண்டு விட்டார்கள்.

போர்ஷியாவும் நெறிஸாவும் வீடு சேர்ந்தவுடன்

வேஷங்களைக் களைந்துச் சுயரூபத்தோடிருந்து தமது நாயகர்களின் வரவை எதிர்பார்த்துக்கொண்டு மன மகிழ்ச்சி முகமலர்ச்சியுடனிருந்தார்.

சிறிது போழ்தானவுடன் பஸானியோ, அந்தோனியோ, க்ரேஷானோ மற்றப் பரிவாரங்களுடன் பெல்மாண்டுக்கு வந்தவர். போர்ஷியா ஒன்று மறியாதவள்போல் அபிநயித்து எல்லோரையு முபசரித்தாள். பஸானியோ நியாயஸ்தலத்தில் நடந்தவற்றையெல்லாம் ஸாங்கோபாங்கமாகச் சொன்னான். போர்ஷியாவும் எல்லாவற்றையும் பொறுமையுடன் கேட்டாள். முதற்கட்டில் இந்த ஸம்பிரமங்கள் நடக்கையில் இரண்டாங்கட்டில் ஒரு இரைச்சல் கேட்டது. சற்றுநேரத்திற்கெல்லாம் நெறிஸாவும் க்ரேஷானோவும் கோபங்கொண்டவராய்ப் போர்ஷியா இருந்த இடத்திற்கு வர இரைச்சலுக்கும் கோபத்திற்கும் காரணமென்னவென்று போர்ஷியா கேட்டாள். அதற்கு க்ரேஷானோ "அம்மணி, கலியாணகாலத்தில் நெறிஸா எனக்கு ஒரு மோதிரம் கொடுத்தாள், அதை நான் சாமளவும் கைவிடேனென்று சொன்னது உண்மையே. ஆயினும் அந்தோனியோவின் உயிரை ரக்ஷித்த தர்ம சாஸ்திரப்பண்டிதருடன் குமாஸ்தா ஒருவர் வந்திருந்தார். அவர் என் கை மோதிரத்தையன்றி வேறொன்றிலும் பிரியப்படவில்லை. பார்வைக்கு அவர் நெறிஸா அத்தனை உயரந்தானிருந்தார். பிராணதானஞ் செய்தவருடைய குமாஸ்தாவுக்கு அற்பமான மோதிரம் தானஞ் செய்தல் குற்றமாகாதென்று நினைத்துக்கொடுத்தேன். அதற்காகத்தான் நெறிஸா நான் வந்ததுமுதல் என்னுடன் வழக்கிடுகிறாள். நான் செய்

யக்கூடியதென்ன? தர்ம ஸங்கடத்திலகப்பட்டுக்கொண்டு விழிக்கின்றேன்" என்றான். போர்ஷியா தன்முகத்தைச் சற்றுச் சுளித்துக்கொண்டு "க்ரேஷானோ மணவாளனுக்கு மனைவி மகிழ்வுடன் கொடுத்த முதற்பொருளை மரணபரியந்தங் காப்பது கடமையாயிருக்க நீர் அந்த மோதிரத்தை எவனுக்கோ கொடுத்துவிட்டுக் குமாஸ்தா தலையிற் பழி போடுகிறீரே. இது தர்மமன்று. எனது பிராணநாதனுக்கு நானும் ஒரு மோதிரங் கொடுத்திருக்கிறேன், அவர் அதைக் கைவிட்டிருக்க மாட்டாரென்பது நிச்சயம்" என்றாள். க்ரேஷானோ பஸானியோ தன் மோதிரத்தைத் தர்மசாஸ்திரப் பண்டிதருக்குக் கொடுத்துவிட்ட ஸங்கதியைச் சொல்லவே, போர்ஷியா தலைகால் தெரியாதகோபங் கொண்டவள்போல நடித்து "நாதா, தாம் என்னருமையை எள்ளளவேனும் உணர்ந்திலீர். கலியாணகாலத்தில் கொடுத்ததை எவரிடத்திலாவது சொற்பனத்திலுங் கொடுத்தலாகுமா? தாம் சொல்வது சரியாகத் தோன்றவில்லையே. நெறிஸாவுக்குண்டான ஸந்தேகம் எனக்கும் பிறக்கின்றது" என்றாள்.

ஸ்திரீ புருஷர்களுக்குள் இவ்வாறு தர்க்கங்களுண்டானதைக்கேட்ட அந்தோனியோ "என்னாலல்லவோ இவ்வளவு துன்பம் விளைந்தது" என்று வெறுப்பாய்ச் சொன்னான். போர்ஷியா "அந்தோனியோ பிரபுவே, தாம் சிந்தனைப்படல் வேண்டாம். சிறுவர் சிறுமியர் இவ்வாறு தான் வழக்கிட்டுக்கொள்வது வழக்கம். தாம் எக்காரணம் பற்றியும் வருந்தவேண்டாம். தாம் உயிர்தப்பி வந்ததில் என்னிலும் ஸந்தோஷப்பட்டவர்களில்லை" என்று கூறினாள். உடனே ஊழியக்காரர்களுக்குப் பெரிய விருந்து

தயார் செய்யும்படி உத்தரவு செய்யப்பட்டது. எல்லோரும் விருந்துண்ணும்போது அந்தோனியோவுக்கு ஒரு கடிதம் வந்தது. அதை உடைத்துப் பார்க்கையில் அந்தோனியோவின் முகம் மிகுந்த களிப்புள்ளதாகத் தோன்றிற்று. உடனே அந்தோனியோவும் சரக்கேற்றியிருந்த தன் கப்பல்கள் துறைமுகத்தில் க்ஷேமமாய்வந்த ஸமாசாரமடங்கிய கடிதமென்று விருந்தினருக்குச் சொல்ல எல்லோரும் அளவிடற்கரிய ஆனந்தத்தை யடைந்தனர். விருந்து முடிந்தவுடன் போர்ஷியா தன் பர்த்தாவிடத்திற் சென்று "நாதா, தமது நண்பர் பிணையாயிருக்கச் சம்மதமானல் தமக்கு இன்னொரு மோதிரம் தருகிறேன். அதை யாவது ஒருவரிடத்திலுங் கொடுக்காமல் பாதுகாப்பீராக" என்று சொல்லித் தான் சிரம தக்ஷிணையாகப் பஸானியோவிடத்தில் வாங்கியிருந்த மோதிரத்தைக் கொடுத்தாள். பஸானியோ அதை வாங்கிப்பார்க்கையில் தான் கொடுத்த மோதிரமாக இருக்கக்கண்டு ஆச்சரியபட்டு 'உனக்கு இந்த மோதிரம் எவ்வாறு கிடைத்தது" என்ன, போர்ஷியா நடந்தவற்றையெல்லாம் ஆரம்பமுதல் கடைசிவரையில் சொன்னாள். அங்கிருந்தவர் போர்ஷியாவைத்தெய்வமென்று கொண்டாடினர். போர்ஷியாவை எவர் தாம் புகழார்? அவளைப்போன்ற பெண்மணிகள் உலகில் உளராயின் துக்கமென்பது தூர விலகும். அந்தோனியோவின் தருமசிந்தை அவர் தலையைக்காத்தது. நேர்மை, மனத்திட்பம், ஆபத்திற்குதவல் முதலிய மேன்மைக் குணங்களின் நிதியாகிய போர்ஷியாவால் உத்தமர்களுக்கு வரும் இடையூறுகள் சூரியன் முன் பனிபோல நீங்குமென்பதும் நிச்சயம்.

ஹேமவர்மன் கதை

உத்தரபல்லவம் என்னுந் தேசத்தில் ஹிரண்யவர்மன் என்னுமரசன் செம்மைநெறி வழுவாதவனாய்ச் செங்கோல் நடத்திப் பிரஜைகளெல்லாரும் அவனிடத்தில் அதிக அன்பு பாராட்டப் புகழடைந்திருந்தான். இவ்வரசனுக்குக் காஞ்சனமாலை யென்னும் ராணியிருந்தாள். அவளிடத்தில் அரசனுக்கிருந்த காதலுக் களவேயில்லை. ஆதலால் அவன் அவள்மேல் 'காற்றும் வலித்து அடிக்காமல்' பாதுகாத்து வந்தான். இவ்விருவருக்கும் ஹேமவர்மன் என்னும் குமாரன் பிறந்தான். பிதாவின் எல்லா நற்குணங்களும் ஹேமவர்மனிடத்தில் நூறுமடங்கு அதிகமாய்ப் பிரகாசித்தன. "தம்மிற் றம்மக்க ளறிவுடைய மாநிலத்து மன்னுயிர்க் கெல்லா மினிது" என்றபடி ஹேமவர்மனுடைய கல்வியின் சிறப்பைக்கண்டு பெற்றோரிருவரும் களித்திருந்தார்கள். ஆகவே ஹிரண்யவர்மனுக்குக் குறையொன்றுமில்லையென்றே உலகத்தார் சொல்லிவந்தனர்.

ஹிரண்யவர்மனுக்குக் குமதி என்று தம்பி ஒருவனிருந்தான். ஆகாத்தியக்காரனுக்குப் பிர்மஹத்திக்காரன் ஸாக்ஷியாய் வருதல்போல் குமதிக்குச் சாணக்கியன் என்றொரு தோழனிருந்தான். இரண்டுபேரும் ஒன்றுகூடி மந்திராலோசனை செய்யும்போதெல்லாம் அந்த நாட்டார் 'எவர்குடி கெடுமோ, எந்த நாடழிய இருக்கின்றதோ" என்று அஞ்சுவார்.

ஹிரண்யவர்மனுடைய சரீரம் வச்சிர சரீரம்; வியாதியாய்க் கிடந்தால் ஒருவருக்ஷந் தாங்கக்கூடியது. சண்டையில் ஹிரண்யவர்மனை ஜயித்த அரசர்கள் இல்லை. யமனும் அவனிடத்தில் வர அஞ்சுவான். இப்படியிருக்குங்காலத்தில் ஒருநாள் ஹிரண்யவர்மன் லதாக்கிரகத்தில் நித்திரைசெய்துகொண்டிருக்கும்போது சர்ப்பந் தீண்டி இறந்தானென்று ஒரு வதந்தி பிறந்தது. இறந்த ஹிரண்யவர்மனுக்கு உத்தரக்கிரியைகளும் கிரமப்படி நடந்தன. ஆனால் அவனுக்குப் பின் அவன் குமாரனாகிய ஹேமவர்மன் பட்டமடைய வேண்டியிருக்கக் குமதி சிங்காதன மேறிவிட்டான். குமதியின் தோழர்கள் அரண்மனையிற் கூடி எல்லா அதிகாரத்தையும் வகித்திருந்தார். பிரஜைகளில் பெரும்பாலர் ஆடுகள் போன்றவராகையால் தற்கால அதிகாரிக்கே மரியாதைகள் செய்து வந்தனர்.

உலைவாயை மூடினாலும் ஊர்வாயை மூடலாமா? ஹிரண்யவர்மன் சர்ப்பந் தீண்டி யிறந்தானென்பதை அநேகர் நம்பவில்லை. அவனைத்தீண்டிய சர்ப்பம் அவனுக்குப் பின் சிங்காசனமேறி யிருக்கிறதென்றே பலரும் ஊகித்தார்கள். குமதிசெய்த பின்னொரு காரியத்தால் ஜனங்களுடைய சந்தேகம் பலப்பட்டது. அண்ணன் இறந்த இரண்டு மாதத்திற்குள் குமதி அண்ணனுடைய மனைவி காஞ்சனமாலையைக் கலியாணஞ் செய்துகொண்டான். இந்தக் கலியாணம் எரிகிற நெருப்பில் எண்ணெய் வார்த்தாற்போல் நாட்டிலுள்ள நன்மக்களுக்குக் கோபத்தை விருத்தி பண்ணிற்று. ஹிரண்யவர்மன் உயிரோடிருக்கும்போது, அவனும் மனைவியும் இரண்டுடலில் ஒரு பிராணன்

போல் அன்னியோன்னியமா யிருந்தார்களென்று முன்னமே சொன்னோம். என்றாலும் முதற் புருஷனிறந்து முப்பது நாட்களில் மைத்துனனை மணம்புரிய மனமுவந்த மாது முதற்புருஷனிடத்தில் வைத்ததாக நடித்த அன்பு முற்றிலும் மாயையே ஒழியே வாஸ்தவமான தன்றென்றே உலகம் கூறிற்று. ஹிரண்யவர்மனைக் கொலைசெய்யக் காஞ்சனமாலையும் உடந்தையாயிருந்திருத்தல் வேண்டுமென்றே அனேகர் உறுதி செய்தார்கள். பனையடியிலுட்கார்ந்து பாலைக் குடித்தாலுங் கட்குடித்தானென்றுதானே உலகத்தார் சொல்வார். வாஸ்தவம் கடவுளறிவார்; உலகத்தார் அபவாதத்திற்குக் காஞ்சனமாலை உள்ளாளென்பதிற் சந்தேகமில்லை.

'அன்னையும் பிதாவு முன்னறி தெய்வ' மென்று படித்திருக்கிறோம். ஹேமவர்மன் தன் மாதா பிதாக்களைத் தெய்வமாக நினைத்து வழிபட்டு வந்தவன். தகப்பனிறந்ததற்குக் காரணந்தெரியாமல் மிகுந்த கவலைகொண்டிருந்த சமயத்தில் தாயின் கலியாணத்தால் மனம் நொந்தானென்று சொல்லவும் வேண்டுமோ? தன் மாதாபிதாக்கள் ஒருவருக்கொருவர் அன்பு பாராட்டி வந்ததையும் பிரத்தியக்ஷமாகப் பார்த்திருந்ததனால், இரண்டு மாதத்திற்குள் முதற் புருஷனை முற்றிலு மறந்து அவன் கால்தூசும்பெறாத குமதியை மணந்த தன் மாதாவை நினைக்க நினைக்க, ஹேமவர்மனுக்குப் பெண்பாலரிடத்தில் விசுவாசங் குறைந்தது. ஆகவே அவன் யௌவன புருஷர்களுக்கு இற்கையாயுள்ள காலப்போக்குகளை யெல்லாந்துறந்து எப்போதும் துக்கச்சின்னமுடையவனாய்த் தோன்றினமையால் ஒரு நாள்,

4

காஞ்சனமாலை:—குழந்தாய், நீயும் நம்மைப்போல் முகமலர்ச்சியுள்ளவனாயிரு. துக்கத்திற் கிடங்கொடாதே. [என்றும்]

குமதி:—இறந்த அப்பனுக்கு எத்தனைநாள் இழவு கொண்டாடுகிறாய்? உன் அப்பனுக்கு அப்பன் இறக்கவில்லையா? உன் முப்பாட்டனிறக்கவில்லை? உலகந் தோன்றின நாள்முதல் இறத்தலும் பிறத்தலும் நடந்தே வருகின்றன. ஆயுள் முழுவதும துக்கப்படுகிறதா? [என்றும்]

காஞ்சனமாலை:—உன் பிதாவின் உத்தரக்கிரியைகள் நடந்தாகியும் நீ விசனக்குறிப்பைக் காட்டும் ஆடை தரித்திருப்பது சரியன்று. வேறு உன் மனத்தை வருத்துவது இருக்குமாயின் அதைச்சொல். நாம் அதை நிவர்த்திசெய்ய முயல்வோம். [என்றும்]

சொன்னதைக் கேட்ட

ஹேமவர்மன்:—உங்களிருவருக்கும் தண்டனிடுகிறேன். உங்கள் ஆக்ஞையை மீறி ஒன்றுஞ் செய்யேன். ஆனால் என் மனத்தின் நோயைத்தீர்க்க மருந்தில்லை என்றான்.

ஹேமவர்மன் ஒழுங்காய்விட்டானென்று எண்ணிக் கொண்டு குமதியுங் காஞ்சனமாலையும் ஒருவாறு திருப்தி யடைந்தார்கள்.

இப்படியிருக்கையில் ஒரு நாள் மாதவின் மணத்தையும் பிதாவின் மரணத்தையும் எண்ணி நெஞ்சம் புண்ணாகிப் புத்தி கலங்கியிருந்த ஹேமவர்மனிடத்தில் கோட்டைவாசற்

காவற்காரர் சிலர் வந்து "ராஜகுமாரனே, நாங்கள் கொஞ்ச காலமாய் ஒரு அதிசயத் தோற்றத்தைக்கண்டு வருகிறோம். நாங்கள் மாமுல்படி பாராகொடுத்து வருவதில், நடுஇராத்திரி ஆனவுடனே தமது பிதாவின் உருவெளித்தோற்றம் தினந் தோறும் எங்கள் கண்ணிற்பட்டு வருகின்றது. தமது நண்பராகிய ஹரேசர் அதனுடன் பேசத்துணிந்து சில வார்த்தைகளையும் அதற்குச் சொன்னார். ஆனால் அது ஹரேசர் பேச்சைமாத்திரம் கவனமாய்க் கேட்பதுபோலப் பாவனை செய்ததேயொழிய மறுமொழி ஒன்றுஞ் சொல்லாமல் மறைந்தது. எல்லாவகையாலும் அது தமது பிதாவைப் போலவே இருந்தது. எங்களிடத்தில் பேசாவிட்டாலும் அது ஒரு சமயம் தம்மிடத்தில் பேசலாமென்று கருதி இதைத் தமக்கு உரையிட்டோம்," என்றார்கள்.

ஹேமவர்மன்:—ஹரேசா, இக்காவலாளிகள் சொல்வது உண்மைதானோ?

ஹரேசன்:—அவர் சொல்வதில் ஒரு எழுத்துக்கூடப் பொய்யில்லை. நான் நேரிற் கண்டவற்றைத்தான் அவர்களுஞ் சொன்னார்கள்.

ஹேமவர்மன்:—புதைபட்ட பிரேதத்தின் ரூபம் வெளியில்வந்து சஞ்சரிக்குமாயின் அது நாட்டிற்குக் கேடன்றோ?

ஹரேசன்:—நமது நாட்டில் நீதி குறைந்துவிட்டபடியால் உற்பாதங்கள் உண்டாகின்றன. சிற்றறிவுடைய நாம் சொல்லக்கூடியதென்ன? உமது பிதாவின் ஆத்மாவுக்கு மனக்குறையுண்டாயிருத்தலாற்றான் அது சூக்ஷ்ம சரீரத்தோடு பூமியில் வந்து உலாவுகின்றது.

ஹேமவர்மன்:—உனக்குக் கோட்டைவாசற் காவல் இன்றைக்குண்டோ? அப்படியாயின் நானும் உன்னுடன் இன்று காவலுக்கு வருகின்றேன். உன்னிடத்தில் பேச இணங்காத ரூபம் என்னிடத்திற் பேசுமா, பார்ப்போம்.

ஹரேசன்:—என் முறை இன்றிரவு காவல், தாமும் வரலாகும். நள்ளிரவிற்கு மேற்பட்ட காலத்திற்றான் சந்திரிகையில் அந்த ரூபம் வெளிப்படுகின்றது. தமது பிதா இறந்தாரென்பதை யறியாதவர் அந்தரூபத்தை ஸ்தூல சரீரமென்றே எண்ணுவார்கள்.

இப்படி இருவரும் பேசிக்கொண்டவாறே அன்றிரவு கோட்டைவாசற் காவலுக்கு வந்தார்கள். காற்று மிகுந்த குளிர்ச்சியாயும் பல்கிட்டும்படியாகவு மிருந்தது. ஹேமவர்மன், "ஹரேசா, இந்தக்குளிர் என்னால் தாங்கக்கூடியதாக வில்லை. நீ எப்படித்தான் பொறுத்து நிற்கின்றாயோ?" என்றான்.

ஹரேசன் (படபடப்புடன்)—ஐயா, கிழக்குமுகமாகத் திரும்பும். அதோ உமது பிதாவின் ரூபம் நிற்கின்றது பாரும்.

பகலில் நடந்த ஸம்பாஷணைப் பிரகாரமே ஹிரண்யவர்மனுடைய ரூபம் தோன்றிற்று. ஹேமவர்மன் தன்குலதெய்வத்தையும் பிதாவையும் தனக்கு ஒருதீமையும் வாராமற் காக்கவேண்டுமென்று பிரார்த்தித்துக்கொண்டிருந்த சமயத்தில் அந்தரூபம் ஹேமவர்மனுக்குக் கைஜாடை காட்டித் தானிருந்த விடத்திற்கழைத்தது. ஹேமவர்மன் மனத்தைத் திடஞ்செய்துகொண்டு போக இருந்தபோது,

ஹரேசன்.—ஐயா, நீர் அதனிடத்திற் போகலாகாது. சூக்ஷ்ம சரீரங்களிற் சிலர் நன்மையைச் செய்பவர். பலர் தீமையைச் செய்பவர். நம்முன்னிருக்கும் ரூபம் எந்த ஜாதியைச்சேர்ந்த தென்றறியோம். அந்தரூபம் துஷ்டப் பிசாசாயிருக்கலாம். தம்மை மலையுச்சியிற் கொண்டுபோய் ஸமுத்திரத்துள் வீழ்த்திவிடலாம். பயங்கரமான ரூபத்தைத் தரித்து உமக்குப் பைத்தியம் பிடிக்கும்படி செய்தாலுஞ் செய்யும். நீர் போதல் 'தோலாதோல்' கூடாது.

ஹேமவர்மன்.—ஹரேசா, நீ கற்றதுங் கேட்டதும் இவ்வளவுக்குத்தானோ உபயோகப்பட்டது? ஸ்தூல சரீரம் என்று மழியும். ஆத்மா நித்தியமானது. என்பிதாவின் ரூபம் பிசாசாகவேயிருந்தாலும், நித்தியனான என் ஆத்மாவுக்குத் தீங்கிழைக்க அதனாலாகாது. இவ்வுடலினழிவுக்கு நானிரங்கேன். பிதாவிறந்து மூப்பது நாளாவதற்கு முன் சண்டாளனாகிய மைத்துனனைக் கலியாணஞ் செய்துகொண்டு காமவிடாய் தீர்த்துக்கொண்டிருக்கும் மாதாவைத் தினம் பார்த்து வருதலினும், பிராணனைப் பிசாசின்கையிற் கொடுத்தலே மேலானது. சாதலை நான் பொருள் பண்ணவில்லை. பிதாவின் மரணத்தின் வாஸ்தவத்தை யறியவே உயிர் வைத்திருக்கின்றேன். நீ என்னுயிர்த்தோழனென்பது உண்மையாயின் என் கையைப்பிடித்துத் தடுக்கலாகாது. எனக்குக் கோபமேலிட்டால் என்ன செய்வேனோ?

ஹேமவர்மன் முரட்டுத்தனமாய்ப் பேசவே ஹரேசன் கையைவிட்டான். ஹேமவர்மன் தன் பிதா ஹிரண்யவர்மனுடைய ரூபம் நின்றவிடத்திற்குப்போய் அதனுடன் அடியில் வருமாறு சம்பாஷித்தான்.

ஹேமவர்மன்.—உம்முடைய அங்க அடையாளங்களைப் பார்த்தால் என் பிதாவாகவே எண்ணுகிறேன். ஆதலால் உம்மைப் பிதாவென்றே அழைக்கின்றேன். உமது ஸ்தூல சரீரத்தை நாங்கள் பூமியில் செவ்வையாயடக்கஞ் செய்து, மந்திர பூர்வமாக ஈமக்கடன்கள் முடித்திருக்க, உமது சூக்ஷ்மசரீரம் துர்மரணமடைந்த பிசாசுகள்போல் பூமியில் சஞ்சரிப்பதேன்? உமக்கு நாங்கள் செய்யவேண்டியனவாய கருமங்கள் இருப்பின் அவற்றைச் சொல்லும் உடனே அவற்றை முடித்து உமக்குச் சாந்தத்தை யுண்டாக்குவோம்.

ரூபம்.—நான் உன் பிதாவின் சூக்ஷ்ம சரீரமென்று நீ நினைத்தது பிழையன்று. நான் சுபாவமாய் இறக்கவில்லை. துர்மரணமடைந்தவன். உன் தாயைக் கலியாணம் பண்ணியிருக்கும் பாதகனான என் தம்பி அதிகார ஆசையால் ஏவப்பட்டு நான் உத்தியானவனத்தில் நித்திரை செய்துகொண்டிருக்கும்போது விஷத்தை என் காது துவாரத்தில் விட்டான். நான் உடனே விழித்துக்கொள்ளாததனால் அந்த விஷத்திராவகம் உடம்பு முழுவதும் பாவி என் ஆவியை அழித்தது. பிறகு உன் சிற்றப்பன் குமதி நான் சர்ப்பந் தீண்டி இறந்தேனென்று ஒரு பொய்யைப் பரவச்செய்திருக்கிறான். அதை நீ நம்பவில்லையென்று நானறிவேன். ஐம்புலன்களும் புத்தியும் தத்தம் தொழிலைச்சரிவரச்செய்து கொண்டிருக்கிற காலத்திலே நாம் தெரிந்தும் தெரியாமலும் செய்திருக்கிற பாவங்களுக்குப் பிராயச்சித்தங்கள் செய்து மரணம் வருமுன்னமே பரிசுத்தராகவேண்டும். நித்திரையிலேயே பிராணவியோகம் எனக்கு வந்துவிட்ட

படியால் எனக்குச் சருவப்பிராயச்சித்தம் ஒன்றுமில்லாமற் போயிற்று. ஆதலால் என் கருமங்களின் பலனை சூக்ஷ்ம லோகத்தில் நானனுபவித்து வருகிறேன். அவற்றை ஸ்தூல சரீரிகளுக்குச் சொல்வது கூடாது. என்னைக் கொலை செய்தவனுக்குத் தக்க தண்டனைவிதிப்பது உன் கடமை. நீ என்னிடத்தில் விசுவாஸம் வைத்திருப்பதற்கு அதுவே அடையாளம். மற்றுமோர் விஷயம் உனக்குச் சொல்லவேண்டுவதுண்டு. நான் உயிரோடிருந்த காலத்தில் தன்னுயிர்வேறு, என்னுயிர்வேறு என்று பிறர் நினைக்கா வண்ணம் இருந்த உன்தாய் முற்றிலும் பூர்வ விசுவாஸத்தைவிட்டு என்னைக்கொன்ற பாதகனை இவ்வளவு சீக்கிரம் விவாகம் பண்ணிக்கொண்டு விட்டாள். இதுவும் பெண் பாலரியற்கைபோலும். ஆகிலும் குமதிக்கு நீ என்ன தண்டனை விதித்தாலும் உன் தாய்க்குமட்டும் ஒன்றுஞ் செய்யாதிருப்பாயாக. ஏனெனில் பேயாகிலும் தாயன்றோ. ஆதலால் அவள் அந்தரங்கமே அவளை வருத்தட்டும். கடவுள் அவளுக்குத்தக்க கூலிதருவார். கிழக்கு வெளுத்துப்போயிற்று. நான் பூமியில் இனி இருத்தலாகாது; செல்கின்றேன். நான் சொன்னதை மறக்காதே. சுவாமி ரக்ஷிக்க ரக்ஷிக்க, ரக்ஷிக்க.

ஹேமவர்மன்.—இந்த நிமிஷம் முதல் நான் கற்றவற்றையும் கேட்டவற்றையும் மறந்து நீர் சொன்ன ஒரு கட்டளையையே மனத்தில்வைத்து நடத்துவேன். இதை நீர் நம்பலாம். சத்தியமாகச் சொல்கின்றேன்.

இவ்வாறு ஹேமவர்மனும் பிதாவின் ரூபமும் பேசி முடிந்தான பிறகு, அந்த ரூபம் மறைந்தது. ஹேமவர்மன்

தன் தோழனை ஹாரோசனிடத்தில் மாத்திரம் நடந்தவற்றைச் சொல்லிப் பரமரகசியமாய்க் காக்கவும் சொன்னான். தான் சமுசயித்தபடியே தன் பிதா துர்மரணத்தாலிறந்தாரென்று நிச்சயமானபோது, சிற்றப்பன் குமதியிடத்திலும் தாய் காஞ்சனமாலையிடத்திலும் ஹேமவர்மனுக்குப் பொறுக்கமுடியாத வெறுப்பு உண்டாயிற்று.

அன்றுமுதல் ஹேமவர்மன் சித்தப்பிரமைகொண்டவன்போல் இருந்தான். கண்டோரெல்லோரும் அவனுக்குப் பித்துப்பிடித்திருக்கிறதென்றேசொனனார்கள். ஆனால் தன் உட்கருத்தைப் பிறர் அறியக்கூடாதென்றே ஹேமவர்மன் அந்த வேஷம் போட்டான்.

குமதியும் காஞ்சனமாலையும் ஹேமவர்மன் மனநிலையைக்கண்டு வருத்தமடைந்தார்கள். பேயென்றாலும் தாயானபடியால் அவள் தன்பிள்ளை பித்தனாய்த்திரிவதை நினைத்துத் துயரமுற்றாள். ஆனால் குமதியோ ஹேமவர்மனை எந்த உபாயம் செய்தாவது தொலைக்கவேண்டுமென்று உறுதி செய்தான்.

குமதிக்குத் துர்ப்போதனை செய்துவந்த சாணக்கியனுக்கு லீலா என்று ஒரு பெண்ணிருந்தாள். பிதா இறக்குமுன் ஹேமவர்மன் அவளிடத்திற் காதல்கொண்டு அவளிடத்தில் தனக்குள்ள அன்பைக்காட்டும் அநேக பொருள்களைக் கொடுத்து வந்திருந்தான். அவன் பித்தன்வேஷம் போட்டபின், லீலாவுக்கு ஹேமவர்மன் எழுதியகடிதங்கள் ஒருநாள் பிரியவசன முள்ளனவாயும், மற்றொருநாள் வெறுப்பைக் காட்டுவனவாயுமிருந்தன. ஆகவே இந்தக்கடிதங்

களில் சிலவற்றை லீலா தன் பிதாவினிடத்திற் கொடுக்கச் சாணக்கியன் அவற்றை அரசனிடத்திலும் ராணியிடத்திலுங்காட்டி, ஹேமவர்மனுக்குப் பைத்தியம் பிடித்திருப்பதற்குக் காரணம் தன் மகளிடத்தில் அவன் கொண்டகாதலே என்று ஸ்தாபித்தான். பண்டம் ஒருஇடம், பழி பத்துஇடமல்லவா ?'' "உண்மையை நானே அறிந்தேன்" என்று பெருமை பாராட்ட எவருக்குத்தான் இடமிருக்கிறது ? அற்பபுத்தியால் சாணக்கியன் சருவக்ஞனாய் வழங்கினான்.

குமதியும் காஞ்சனமாலேயும் இதைக் கேட்டவுடன் லீலாவைத் தருவித்து நேரில் விசாரித்தார்கள். லீலா நடந்ததற்றையெல்லாஞ் சொல்ல, அரசனும் ராணியும் ஹேமவர்மன் காமநோயால் பைத்தியங் கொண்டவனென்று தமக்குள் நிச்சயஞ் செய்துவிட்டார்கள்.

லீலா வென்பவள் ஸ்திரீகளில் உத்தமி. ஹேமவர்மனிடத்தில் யதார்த்தமாகவே விசுவாஸம் வைத்தவள். ஆகவே அவன் பித்தனைப்போல் அலைந்து திரிவதைக்கண்டு மனம் புண்ணாகி, சர்வகாலமும் அவனையே நினைத்துத் துயரமடைந்திருந்தாள் என்றாலும், தன்மனத்தை வாட்டுவதின்னதென்று லீலாவிடத்தில் ஹேமவர்மன் சொன்னானில்லை. ஆதலால்தான் விரும்பிய நாயகனுக்கு மனக்கலக்கம் உண்டானதை நினைத்து லீலா வெகுதூரம் கிலேசம் கொண்டிருந்தாள்.

ஹேமவர்மனோ, பிதாவின் ரூபம் தன்னிடத்தில் சொன்னபடி குமதியைக் கொல்லப் பலவுபாயங்களை எண்ணுவானாயினன். மெய்க்காப்பாளர் எப்போதும் சூழ்ந்திருக்க வாழும் அரசனைக் கொல்வதெப்படி ? தவிர, காஞ்

5

சனமாலை எப்போதும் தன் புதிய நாயகனோடு இருந்தாள். தாயின் மனங்கோணும்படியான காரியத்தையும் ஹேமவர்மன் செய்யத் துணியவில்லை. இயற்கையாய் ஹேமவர்மன் ஜீவகாருண்ணிய முள்ளவன். பிராணிவதை என்பதைச் சொற்பனத்திலும் எண்ணினவனல்லன். ஆகவே குமதியைக் கொலைசெய்தலென்றால் அவன் பின்னிடைந்தான் இந்த நிலைமையில் பிதாவின் ரூபம் ஒருசமயம் துஷ்டப் பிசாசாயிருந்து பொய்யைச்சொல்லித் தன்னைப்பாவச்செயலில் இழுத்துவிடலாமென்று ஒரு சந்தேகம் ஹேமவர்மனுக்கு உண்டாயிற்று. பாம்பென்று தாண்டமுடியாமலும் பழுதையென்று மிதிக்கக்கூடாமலும் மிகுந்த சஞ்சலத்தை யடைந்து, அதனால் முயற்சிக்குறைவும் அவனுக்கு நேர்ந்திருந்தது. ஆகவே இவ்வாறு "வளிமுகச்சுடர்" போல் மனம் ஊசலாடியதில், பிதாவின் கட்டளையை ஏகதேசம் ஹேமவர்மன் மறந்தானென்றுஞ் சொல்லலாகும்.

இப்படியிருக்குஞ் சமயத்தில் சில நாடகக்காரர் அரண்மனைக்கு வந்தார்கள். அவர்களிற் சிலரை ஹேமவர்மன் நன்றாயறிந்திருந்தான். ஆதலால் பிதாவின் ரூபம் சொன்னவற்றின் உண்மையைச் சோதிக்க நினைத்து, ஹேமவர்மன் ஒரு புதியநாடகத்தைச் சற்பித்தான். நாடகபாத்திரங்கள் ஒரு அரசன், அவன் மனைவி, மனைவியின் சோரபுருஷன் முதலானவர். புதிய நாடகத்தின் ஒருகளத்தில் ராணியின் சோரபுருஷன் அரசன் தூங்கும்போது காதில் விஷங் கலந்த திராவகத்தைவார்க்க, அரசனிறந்து போகிறான். ராணி பின்பு சோரபுருஷனையே கலியாணஞ் செய்து கொண்டுவிடுகிறாள்.

இவ்வாறு "ஊமத்தங்காயைக் கொடுத்து உள்ளதை வாங்குவதுபோல்," குமதி செய்த காரியத்தையே நாடகமாக்கி ஆடும்படி ஹேமவர்மன் செய்தான். இளவரசன செய்த சூதையறியாமல் குமதி, காஞ்சனமாலை, சாணக்கியன், லீலா முதலியவர்கள் எல்லோரும் நாடகம் பார்க்கவந்தார்கள். குமதியின் முகச்சாடைகளைக் கவனித்துப்பார்ப்பதற்கு ஹரேசனும் நாடகத்திற்கு வந்தான். தூங்குகிற அரசன் காதில் விஷத்திராவகத்தை வார்க்கிறசமயம் வந்தவுடன் குமதி உடல் நடுங்கிப் பிரக்கினையற்றுத் தரையில் விழுந்தான். சேவகர்கள் அவனைத் தூக்கிக்கொண்டு அரண்மனைக்குட் சென்றார்கள். ஆனால் ஆட்டம் பார்க்கவந்த மற்றவரெவரும் சித்தங்கலங்கவில்லை. குமதி ஒருவனே நடுங்கித் தரையில்விழுந்தது. ஹேமவர்மனுக்குப் போதுமான சாக்ஷியமாயிற்று. பிதாவின் ரூபம் சொன்னது சத்தியமென்ற நம்பிக்கையும் திடப்பட்டது. அரசன் போனவுடன் நாடகமும் கலைந்துபோயிற்று.

ஹேமவர்மன்.— ஹரேசா, என் சிற்றப்பன் முகத்தைக் கவனித்தாயா?

ஹரேசன்.—குட்டிச்சுவரில் முட்டிக்கொள்ள வெள்ளெழுத்தா? உள்ளங்கை நெல்லிக்கனிபோல் எல்லாம் வெளியாயிற்று.

ஹேமவர்மன்.—என் பிதாவின் ரூபம் சொன்னபடி செய்யாமலிருப்பது பிதுருவாக்கியத்தை அலக்ஷியம் பண்ணினதாகும். பாவி குமதி உயிர்வைத்திருக்கும் ஒவ்வொரு நிமிஷகாலமும் உலகிற்குக்கேடு.

ஹரேசன்.—வாயாற் சொல்லிக்கொண் டிருத்தலிற் பயனென்ன ?

நண்பன் இவ்வாறிடித்துச் சொல்லவே, ஹேமவர்மன் ரோஷம் பிறந்து குமதியைக்கொன்றுவிட்டு வேறு காரியஞ் செய்கிறதென்று பிரதிக்கினை செய்துகொண்டான். எந்தக்காரியத்தை அதிககாலம் யோசனை செய்கின்றேமோ அது நிறைவேறுகிறது சந்தேகந்தான்.

மறுநாள் குமதி படுக்கையை விட்டெழுந்தவுடன் காஞ்சனமாலையை அழைத்து, 'உன் மகன் செய்கின்ற விளையாட்டு வினையாய் முடிகின்றது. அவன் வேஷத்தாற் பித்தனேயன்றி வாஸ்தவத்தில் அதிபாதாள வஞ்சகன் அவனை ஊரில் வைத்தல் கேடு. நீ அவனைத் தருவித்துக் கண்டனை செய்தல்வேண்டும். அவன் நன்னெறியில் வராவிட்டால் தக்க ஏற்பாடுகள் செய்துவிடுவோம்,'' என்றான்.

புதிய நாயகனிடத்தில் மிகுந்த அன்புடையவளாயினும் வயிற்றிற்பிறந்த பிள்ளையிடத்தில் அன்பு குறையுமா ? குமதி தன் மகனுக்குக் கேடுசெய்வானென்றஞ்சிக் காஞ்சனமாலை அவனை எச்சரிப்பதற்காக ஹேமவர்மனுக்குச் சொல்லியனுப்பினாள். தாய் பிள்ளையின் மர்மங்களை ஒளிக்கலாகுமென்றெண்ணிக் குமதி தனமந்திரி சாணக்கியனைத் திரையின் பின்புறத்தில் ஒளித்திருந்து அவரிருவரும் பேசும்போது ஒற்றுக்கேட்கும்படி உத்தரவு செய்திருந்தான். ஆகவே, காஞ்சனமாலையும் ஹேமவர்மனும் பேசிக்கொண்டிருக்கும்போது சாணக்கியன் திரைக்குப்பின் நின்று ஒற்றுக் கேட்டுக்கொண்டிருந்தான்.

காஞ்சனமாலை—குழந்தாய், நீ செய்யுங் காரியங்கள் உன் பிதாவுக்கு மனஸ்தாபத்தை யுண்டாக்கி யிருக்கின்றன.

ஹேமவர்மன்:—நீ செய்த காரியம் என் பிதாவுக்கு மிகுந்த கோபத்தை யுண்டாக்கியிருக்கின்றது.

காஞ்சனமாலை —நீ என்ன பிதற்றுகிறாய்?

ஹேமவர்மன்:—நான் பிதற்றவில்லை; உன் கண்ணை அந்தர்முகமாய்த் திருப்பிப் பார்த்தாயானால், உன் பாபங்களின் கொடுமை உனக்கே புலப்படும்

காஞ்சனமாலை:— நான் ஒரு பாபத்தையு மறியாம லிருக்கையில் என்னைப் பாபி என்கிறாய், நன்றாயிருக்கிறது. ஊரிலுள்ளார் உன்னைப் பித்தனென்று கூறினதை இது வரையில் நம்பாமலிருந்தேன். இப்போதுதான் நிச்சயப் பட்டது.

ஹேமவர்மன்:—புருஷனைக் கொன்று மைத்துனனைக் கலியாணம் பண்ணிக்கொள்வதிலுங் கொடும்பாபமுளதோ?

காஞ்சனமாலை:—நான் உன்னிடத்திற் பேசுதல்தகாது உன்னுடன் பேச வேறு பேர்வழிகளிருக்கிறார்கள், அவர்களைத் தருவிக்கின்றேன்.

ஹேமவர்மன்:—(காஞ்சனமாலையின் கையைக் கெட்டியாய்ப்பிடித்து) நீ இருக்குமிடத்திலிருந்து ஒருஅங்குலமும் விலகாதே. உன் முன் ஒரு கண்ணாடியைவைக்கிறேன். அதில் உன் இருதயத்தைப் பார்த்தால் அது கறைப்பட்டிருப்பது உனக்கே நன்றாய்த் தெரியும்.

காஞ்சனமாலை:— ஐயோ, என்னைக் கொல்லுகிறான். உதவிசெய்ய ஒருவருமில்லையா, ஐயோ! ஐயோ!!

ராணியின் கூக்குரலைத் திரையின் பின்புறத்திலிருந்த சாணக்கியன் கேட்டு, "ராணியைக் கொலைசெய்கிருன், உதவிக்கு வாருங்கள்," என்று கத்தினுன் ஹேமவர்மன் இந்தச்சத்தம் அரசனுடைய தென்றெண்ணி முன் பின் யோசியாமல் கூக்குரலுண்டான இடத்தைப்பார்த்துக் கத்தியால் குத்தினுன். உடனே சாணக்கியன் குத்துப்பட்டு உயிரைத் துறந்தான். திரையைத்தூக்கிப் பார்த்தபொழுது சாணக்கியன் பிணமாய்க் கிடந்தது தெரிந்தது.

காஞ்சனமாலை:— அடா பாபி, ஹேமவர்மா, என்ன கொடுங்கொலை புரிந்தாய்! என்ன செய்வேன்! என் மனம் பதைக்கின்றதே! ஐயோ, பாவம்!

ஹேமவர்மன்:—திருடன் போற் பதுங்கி யிருந்தவனிறந்தது நியாயம். உன் முதற்புருஷனுயிருந்த என் பிதா ஆபிரம் மன்மதனுக்குச் சமானமாயிருந்தான் அவனுக்கு நீ துக்கப்படவேயில்லை. வழியிற்போகும் வம்பன் செத்தால் அதற்கு ஊரைக் கூட்டுகின்ருயா? இது ஸ்திரீகளுடைய சாகசவித்தை. இது நிற்க, உனக்கு நான் சொல்லவேண்டிய விஷயங்கள் சில வுண்டு. அவற்றைக் கேட்பாயாக.

இதோபார், இரண்டு படங்களிருக்கின்றன. இது என் பிதாவினுடையது; மற்ருென்று இப்போதுனக்குப் புருஷனுயிருப்பவனது. உனக்குக் கண்களிருக்குமானுல் இரண்டையும் ஒத்துப்பார். உன் முதற் புருஷனுடைய தாமரைபோன்ற கண்களும், சந்திரபிம்பம் போன்ற முகமும், மலைபோலகன்ற மார்பும், முழந்தாள் வரையில்நீண்ட கைகளும் அவனைஅழகே அவதாரமாய்வந்தபுருஷனென்று

காட்டவில்லையா? குலத்தைக் கெடுக்கவந்த கோடாரிக் காம்புபோன்ற உன் இரண்டாவது புருஷன் மூஞ்சியைப் பார். தயவு, தாக்ஷிண்யம், ஜீவகாருண்ணியம் முதலான அரசர்க்குரிய சின்னங்களில் ஒன்றாவது இருக்கிறதா? உன் புத்தி எங்கு போயிற்றோ? இவ்வளவு காலம் கழிந்தபின் நீ புருஷனை இச்சிப்பதற்கே நியாயமில்லை. ஆனால் ராணிப் பட்டம் வகிக்க ஆசைப்பட்டுக் கொலைபாதகனுக்கு வாழ்க்கைப்பட்டாய். இன்றுமுதல் குமதியின் முகாவலோகனஞ் செய்வதில்லை யென்று பிரமாணஞ் செய். இல்லாவிட்டால் உன்னை விடேன்.

காஞ்சனமாலை:—பாபமொன்றையும் நான் செய்யா விட்டாலும், உன் வார்த்தைகள் எனக்கு அச்சத்தை யுண்டாக்கி யிருக்கின்றன. என் பிழையை நன்றாய் விளக்கி விட்டாய், இது எனக்குப் பல ஜன்மங்களுக்குப் போதும் போதும்.

பெற்றோரிடத்திலுள்ள குறைகளைப் பல்லோர் அறியச் சொல்வது பிள்ளைகளுக்கு நீதியன்றாயினும், ஹேமவர்மன் நல்லசமயம் வாய்த்ததைக்கண்டு புண்ணிற்கோலிட்டதுபோல் தாயைக்கண்டித்தான் ' பெரியோர் பெரும் பிழை செய்தனராயின் சிறியோ ரப்பிழை பொறுத்தலு மரிது '' மரியாதை பார்க்குஞ் சமயமாக வில்லை. ஹேமவர்மனுக்கு ஆத்திரந் தணிந்ததென்று அறிந்தவுடன் காஞ்சனமாலை அவனை அணைத்து ஆதரவாய்ப் பேசித் தன் மனம் சுத்தமாவதற்கு வழியைக் காட்டினதற்கு நன்றி பாராட்டினாள். தாயும் பிள்ளையும் முன்போலப் பரஸ்பர விசுவாச முடையவர்களானார்கள்.

கோபாவேசத்தில் தன்னால் கொலையுண்டவன் லீலாவின் பிதாவென்று தெரிந்தபிறகு ஹேமவர்மன் மிகவும் பரிதாபப்பட்டான். ஆனால் கண் கெட்டபிறகு சூரியநமஸ்காரத்தாற் பிரயோஜனமென்ன ?

சாணக்கியனைக் கொன்ற வியாஜத்தை முன்னிட்டு ஹேமவர்மனைத் தேசாந்தரம் அனுப்பக் குமதி ஆக்ஞை செய்தான். அவ்வன்னியதேசத்தரசன் குமதிக்குக் கப்பங் கட்டுகிறவன். குமதி கீறின கீற்றுக்கு மிஞ்சி நடக்கத் துணியாதவன். ஹேமவர்மனுடன் இரண்டு தூதர்களைக் குமதி போகச்சொன்னான். தூதர் கையில் கொடுத்த பத்திரத்தில் ஹேமவர்மன் தலையைக் கடிதம் படித்தவுடனே சிறிதும் யோசியாமல் வெட்டிவிடும்படி அன்னிய தேச அரசனுக்குக் கண்டிப்பாக எழுதப்பட்டிருந்தது. இம் மூவரும் கப்பலேறிச் செல்லுகையில் ஒருநாளிரவில் தற்செயலாய் அந்தக்கடிதம் ஹேமவர்மன்கையிலகப்பட்டது. அதை வாசிக்கையில் சிற்றப்பன் தன் பிதாவைக் கொன்றது போதாதென் றெண்ணித் தன்னையும் கொல்ல முயன்றானென்று விளங்கிற்று.. உடனே ஹேமவர்மன் அந்தப் பத்திரத்தில் தன்பேரை யடித்துத் தூதரிருவர் பெயர்களையும் எழுதிவைத்துக் கடிதத்தை அவர்கள் பெட்டியிலேயே வைத்துவிட்டான். தூதரிருவரும் ஓர் படவிலும் ஹேமவர்மன் மற்றோர்படவிலும் போய்க்கொண்டிருந்தார்கள். பிறகு கப்பற்கொள்ளைக்காரர் நடுச்சமுத்திரத்திற் சண்டைக்குவரத் தூதர் படவு புறங்காட்டி ஓடிற்று. ஹேமவர்மன் இருந்த படவுமட்டில் திருடர்கையிலகப்பட்டது. கொள்ளைக்காரர் ராஜகுமாரன் தம் வசப்பட்டதையறிந்து ஹேம

வர்மனுக்கு உபசாரங்கள் செய்து உத்தர பல்லவத்தில் திரும்பவுங் கொண்டுவந்து அவனை இறக்கினார்கள். அன்னிய தேசத்திற்குக் குமதியின் பத்திரத்தை எடுத்துப்போன தூதர்களிருவரும் தலைகளை யிழந்து மாண்டார்கள். கெடுவார் கேடு நினைப்பார்!

உத்தரபல்லவத்தில் வந்திறங்கினவுடன் ஹேமவர்மன் சிற்றப்பனுக்குத் தன் வருகையைத் தெரிவிக்கக் குமதி இது என்ன, பிள்ளையார் பிடிக்கக் குரங்காய் முடிந்ததென்று மனக்கலக்கமுற்றான். அன்று மாலை ஹேமவர்மன் நகரத்துட் பிரவேசித்தபோது, அந்தோ! அவன் கண்களில் மிகவும் துன்பமான காக்ஷி ஒன்று தோன்றிற்று. கன்னிகை ஒருத்தியினுடைய சவக்கோலம் வந்து கொண்டிருந்தது. சவத்துடன் அரசன், அரசி. கனதனவான்கள் பலர் எல்லோருஞ் சென்றார்கள். புதைகாட்டிற்கு ஹேமவர்மனும் கூட்டத்துடன் சேராமல் நடப்பவற்றைக் கவனித்துக் கொண்டு செல்வானாயினன். சவக்குழியில் பிரேதத்தை வைத்தபின் அரசியாகிய காஞ்சனமாலை சவத்தின்மேல் நறுமணங்கமழும் மலர்களைத் தூவி "அருமை லீலா, நீ என் மகனை மணந்து உன் மனப்பந்தரில் மலர் தூவ எண்ணியிருந்தேன். உன் சவத்தின்மேல் மலர் இறைப்பேனென்று நான் எக்காலமும் நினைத்தேனில்லை. கடவுள் நியமனம் இவ்வாறாயிற்று." என்று புலம்பினாள். லீலாவின் ஸகோதரன் லலாடன். அவன் தன் பிதா இறந்ததைக்கேட்டுத் தன்னூருக்கு வந்தான். லீலா தன் கருத்துக்கிசைந்த நாயகனால் தன் பிதா கொலையுண்டதைக் கேட்டதுமுதல் சித்தப்பிரமைகொண்டு ஒரு நாள் ஆற்றோரஞ்சென்றபோது

6

அதில் வீழ்ந்திறந்தாள் "பட்டகாலிலே படும், கெட்ட குடியே கெடும்" என்ற வாறு லலாடனுக்குத் தீராத்துக்கம் இரண்டு ஏககாலத்தில் ஸம்பவித்துவிட்டது. லலாடன் தன்னுயிரையுந் துறக்கத்தீர்மானித்து அதே சவக்குழியி லிறங்கி பக்கலில் நின்றோரைப்பார்த்து "என்னருஞ் சோதரியுடன் நானுமிறக்கின்றேன். பிதாவும் சோதரியும் போனபின் உயிரை வைத்திருப்பதிற் பயனென்ன? மலையத்துணை மண்ணை எங்களிருவர்மேலுங் கொட்டுங்கள்" என்று கதறினன். எட்டாக்கையில் நின்ற ஹேமவர்மன் லலாடன் சொல்வதெல்லாம் வெறும் வேஷம்; வாஸ்தவத் தில் அவன் மனத்தில் துக்கலேசமுமிராதென்றெண்ணி ஒரு பாய்ச்சலில் சவக்குழியில் குதித்து, "நாற்பதினாயிரம் சோதரர்களுடைய அன்பும் என் அன்பிற் கீடாகாமலிருக் கப் பார்த்தோர் கேட்டு மனமகிழ்தற்கென்று பொய்த்துக்கங் கொண்டாடுவதென்னோ?" என்று தூற்றினன். பிதா, சோதரி இருவர் மரணத்திற்கும் காரணனாயிருந்த ஹேம வர்மனை எதிரில் கண்ட தக்ஷணமே லலாடனுக்குக் கோபம் பொங்கி ஹேமவர்மன் கழுத்தை நெரிக்கப்போனான். அந் தச்சமயம் பக்கலிலிருந்தவர்கள் சண்டையை விலக்கி இரு வரையும் ஏகதேசம் ஸமாதானம் பண்ணி அனுப்பினார்கள்.

கொலைப்பேய் பிடித்த குமதி பரதேசத்தரசனால் ஹேமவர்மனை ஒழிக்கச்செய்து உபாயந்தவறினது முதல் புதிய உபாயம் தேடிக்கொண்டிருந்தான். சாணக்கியன் குமாரன் லலாடன் ஹேமவருமனிடத்தில் வைத்த துவே ஷத்தை ஒரு கருவியாக வைத்து இளவரசனை யமனுக்கிரை யாக்க நினைத்து லலாடனைத்தருவித்து "லலாடா, உன்

பிதா நமக்கு அத்யந்தம் நேயரென்று அறிவாய். உன் சோதரியினும் உத்தமி உலகிலிருந்தனரோ? இவ்விருவருடைய தூர்மரணத்திற்கும் ஹேதுவாயிருந்தவன் நமது அண்ணன் மகன் ஹேமவர்மனல்லவா? அவனை எவ்வாறுவது ஒழித்தலுக்கு இதுகாறும் நாம்செய்த பிரயத்தனங்கள் வீணேபோயின. புதிதாக ஒன்று தோன்றியிருக்கிறது. அதை உனக்குச்சொல்வோம். பிதாவினிடத்திலும் சோதரியிடத்திலும் அன்புள்ளவனென்பது வாஸ்தவமாயின் இரகசியமாய்க் காரியத்தை முடித்தல் வேண்டும். ஹேமவர்மன் கத்திச்சிலம்பத்தில் தனக்கு நிகர் ஒருவருமிலரென்று பெருமையடைந்திருக்கின்றான். நீ அயலூருக்குப் போயிருக்கும்போது சிலம்பவித்தை பிரஸ்தாபம் வந்தது. நாம் அப்பொழுது உன் பேரைச்சொல்லவே ஹேமவர்மனுக்குப் பொறாமைமேலிட்டு லலாடனுக்கு என்ன தெரியும்? கத்தியையும் பிடிக்க அறியான். வெகு உயர்த்தியாகப் பேசுகின்றீரே. என்னுடன் ஒரு முறை அவன் யுத்தஞ்செய்யட்டும். அப்புறம் நீர் எவர் பெரியவரென்று அறிவீர்" என்று கண்சிவந்து சொன்னான். நாம் நாளைக்குச் சிலம்பயுத்தம் ஒன்று ஏற்பாடு செய்வோம். ஹேமவர்மன் அவசியம் ஸம்மதிப்பான். துஷ்டனாய்த்தோன்றினாலும் ஹேமவர்மன் அதர்மயுத்தஞ் செய்யான். சத்துருக்களிடத்தில் தருமத்தை நினைத்தலும் புத்திக்குறைவென்பதைச் சாணக்கியன் குமாரனுக்கு நாம் சொல்லவும் வேண்டுமோ? உன் கத்தி கூர்மையாயும் விஷந்தீட்டிய முனையுடையதாகவுமிருத்தல் வேண்டும். ஹேமன் மழுங்கின முனையுள்ள கத்தியைத்தான் வைத்துக்கொள்வான். சண்டை மும்முரத்தில் விஷமுனையால் அவனை நீ குத்திவிடு. அதிலுமவன் இறவானாயின்

இன்னொரு உபாயம் வைத்திருக்கிறோம். ஹேமவர்மன் தாகந்தீர்க்க நீர் கேட்பின் விஷங்கலந்த நீரைக் கொடுத்து விடுகின்றோம். உனது ஸம்மதமென்ன? என்று கேட்டான். ஆகாத்தியக்காரனும் பிரமஹத்திக்காரனும் கூட்டுறவானால் உலகத்திற்கு எந்தக்கேடுதான் விளையாது? லலாடன் குமதியின் இஷ்டப்படியே நடத்தலுக்கு உடம்பட்டான்.

மறுநாள் பகலில் ஹேமவர்னுக்கும் லலாடனுக்கும் கத்திச்சிலம்பம் நடந்தது. குமதி, காஞ்சனமாலை, இன்னு மனேகருங் கூடியிருந்தார்கள். ஹேமவர்மன் ஜயித்தபோ தெல்லாம் குமதி "ஸபாஷ், ஸபாஷ்" என்று கத்துவான். ஒரு ஸமயம் லலாடன் தன்கத்திமுனையால் ஹேமவர்மனைக் குத்த ஹேமவர்மன் கோபாவேசனாய் லலாடன் கத்தியைப் பிடுங்கி அவனைத் திரும்பக் குத்தினன். குற்றுயிராய் லலாடன் தரையில் விழுந்தான்.

இருவரும் யுத்தஞ் செய்துகொண்டிருந்த போழ்து காஞ்சனமாலை தாகித்து விஷங்கலந்த நீரைப் பருகி "ஐயகோ, யாரோ எனக்கு விஷமிட்டார்" என்று கதறிக கொண்டு மண்ணில் வீழ்ந்திறந்தாள். ஹேமவர்மனுக்கு அதிக கோபமுண்டாகித் தாய்கிடந்த இடத்திற்கு விரைந்து போகுந் தருணத்தில் லலாடன் "நண்பா, உனக்குத்தீங்கு இழைக்க எண்ணின நான் சாகப்போகிறேன். நீ இன்னும் அரை நாழிகைகூட உயிரோடிருக்கமாட்டாய். உன் சிற் றப்பன் செய்த சதியோசனையால், தான் கெட்டதல்லாமல் சந்திர புஷ்கரணியையும் கெடுத்தானென்றாற்போல உனக் கும் கேடிழைத்தவனானேன். என்குற்றத்தை நீ பொறுத்தல் வேண்டும்" என்று பரதவித்துச் சொல்லி உயிர் துறந்தான்.

லலாடன் வசனித்தவற்றைச் செவியுற்ற ஹேமவர்மன் ஆத்திரம் பொங்கிப் புலியைப்போல்பாய்ந்து சிற்றப்பன் குமதி உடலைப்பிளந்து பிதுர்வாக்கிய பரிபாலனஞ் செய்தான்.

ஹேமவர்மனுக்கும் அதேஸமயம் லலாடன் கைக் குத்தினால் பிராணவியோகம் நெருங்கிற்று. அத்தருணம் தன் நண்பன் ஹரேசனையழைத்து "மித்ரா, என் பிராணன் போகின்றது. நமது இரகசியம் நாட்டிலுள்ளார் அறியார். எவரும் என்னைக் கொலைபாதகனென்று நிந்திப்பார். அவ்வாறு தூற்றப்படுதலில் எனக்கு எள்ளளவேனும் பிரியமில்லை. நீ இந்நாட்டாருக்கு ஆதிபோடத்தமாய் என் சரித்திரத்தைச் சொல்லிப் பழிக்குள்ளாகாமற் செய். அதுவே உன்னை மித்ரனாகப்பெற்றதற்கு நான் அடையும் பயன். உத்தரபல்லவம் அராஜகமாகாமல் எனது நண்பன் பார்த்திவனை என் ஸ்தானத்தில் நியமித்துளேன். அவனுக்கு மகுடாபிஷேகம் செய்வித்துச் சுகம்பெறக்கடவீர்" என்று கூறி முகமலர்ச்சியோடு பரமபதமடைந்தான்.

லோஹிதன் கதை.

விடபி என்னுந்தேசத்தில் லோஹிதன் என்ற ஒரு அரசனிருந்தான். அவன் வெகுகாலம் ராஜ்யபாரத்தை வகித்து வந்தமையால் அரசாட்சி செய்வது அவனுக்கு மிகவும் கஷ்டமாயிருந்தது. புத்ரபாக்கியமற்றவனுயுமிருந்தான். அவனுக்கு மூன்று பெண்களிருந்தார்கள். அவர்களில்

மூத்தவளுக்குக் கமலா வென்றும் இரண்டாமவளுக்கு நீலா என்றும் மூன்றும் பெண்ணுக்கு விமலா என்றும் பெயர். கமலாவுக்கும் நீலாவுக்கும் விவாகம் நடந்துவிட்டது. விமலை கன்னிகையாயிருந்தாள். விமலையின் அழகையும் குணாதி சயங்களையுமறிந்த பரதேசத்தரசர் அவளை விவாகம் பண்ணிக்கொள்ளவேண்டுமென்று இரவு பகலாய் லோஹிதனைக் கேட்டுக்கொண்டிருந்தார்கள். அவ்வாறு விமலையிடத்தில் மோகங்கொண்டவர்களில் முக்கியமானவர் இருவர். அவ்விருவரில் பேரி தேசத்தரசன் ஒருவன்; மற்றவன் சேதி தேசத்தவன். விமலையைக் கலியாணம் செய்து கொள்பவன் வேறுங்கையனாகப் போவதில்லை என்பது யாவருமறிந்தவிஷயம்.

வயது முதிர முதிர லோஹிதனுக்குச் சரீரத்தளர்ச்சியும் அதிகப்பட்டுக்கொண்டு வந்தன. மந்திரிகள் ஒருவரொருவராய் மணிக்கொருதரம் தன்னிடத்தில் வரவும் அவர்களுக்குத்தக்க உத்தரவுகள் பிறப்பிப்பதும், பிரஜைகள் நேரில் சொல்லிக்கொள்ளும் குறைகளுக்குப் பரிகாரஞ் செய்வதும் புறத்தேசத்தரசரால் தன் நாட்டுக்குக் கேடு வராமல் காப்பதும் மிகவுஞ் சிரமமாயிருப்பதைக் கண்டு மந்திரிமார்களைத் தன் ஸபைக்கு அழைத்து அடியில் வருமாறு சொல்வானாயினன்:—

அமாத்தியர்களே, நம்முடைய பிதாவால் அளிக்கப்பெற்ற விடபிநாட்டை அறுபது வருஷகாலமாய் ஏகாதிபதியாக நாமாண்டு வந்தோம். நமக்கு எண்பதாவது வயது பிறந்துவிட்டது. மூப்பின் கொடுமை மிகுதியாயிருக்கிறது நமக்குப் புத்திரனில்லாத்துக்கத்தை ரத்னங்கள் போன்ற

மூன்று புத்ரிகள் ஆற்றி வந்திருக்கிறார்கள். இருவர் தமக்கேற்ற கணவர்களை யடைந்திருக்கிறார்கள். நமது மருமகப் பிள்ளைகள் இருவரும் ராஜ்யத்தை நடத்தும் திறமையுள்ளவர்களாயுமிருக்கிறார்கள். இனி நாம் அரசு செலுத்தலைக் கைவிட்டுக் கடவுள் அடியைத்தியானம் பண்ணிக்கடைத்தேற வழி பார்த்திருக்கிறோம். இது காறும் உம்முடைய உதவியால், சரிவர ராஜ்யகாரியங்கள் ஒழுங்காக நடத்தப்பட்டு வந்திருப்பதால் உம்முடைய ஸம்மதமில்லாமல் நாம் எந்தக் காரியத்தையும் செய்கிறதில்லை என்கிற உறுதிப் பாட்டிற் கொத்தபடி உம்முடன் கலக்க எண்ணி அழைத்தோம். விடபி நாட்டை மூன்று பாகமாகப்பிரித்து நம்முடைய புத்ரிகள் ஒவ்வொருவருக்கும் ஒரு பாகத்தைக் கொடுத்துத் தனித்தனி அரசு செலுத்தும்படி கட்டளை பிறப்பிக்கலாமென்பது நமது கருத்து. உங்கள் ஆலோசனையை இந்த ஸபையிலேயே தெரிவிக்கவேண்டியது.

ராஜனுடைய ஆக்ஞைக்குக் கீழ்ப்பட்டு நடக்கவேண்டிய மந்திரிகள் தைரியமாகத் தமது உட்கருத்தை வெளிவிடுதல் அரிது. அவர்களில் **காந்தன்** என்னும் மந்திரி வயதிலும் கல்வியிலும் லோகானுபவத்திலும் மற்றவரை விட மேம்பட்டவன். அவன் அரசனை நோக்கி, “ மஹாராஜ், எம்போலியரைப் பொருள் பண்ணித் தாம் யோசனை கேட்கும்போது நேர்மையான மறுமொழி சொல்வது எங்கள் கடமையன்றோ? எவ்வளவோ புண்ணியஞ் செய்து ராஜ்யலக்ஷ்மி ஒருவருக்கு வசப்படுகிறாள். அந்தத்தேவியின் அருட்பெருக்கத்தை அவரவருள்ளவரையில் அனுபவிக்க வேண்டுமேயன்றி இடையில் கைவிடலாகாது. தண்

ணீரில் யானையை இழுக்கும்படியான வன்மையுள்ள முதலையைக் கரையில் போட்டால் அற்பநாயும் அதை இழுத்துப்போம். மகுடாதிபதிகள் என்றுமே மகுடத்தைத் தரிக்கவேண்டும். மகுடத்தைத் துறப்பின் மரியாதை கெடும். தமது புத்ரிகளிடத்தில் அன்பின்குறைவால் இவ்வாறு சொன்னேன் என்று தாம் எண்ணலாகாது. எனக்கில்லாத பொருட்குவியல்களை அவர்களுக்குத் தாம் ஈதலில் எனக்கு ஆக்ஷேபலேசமுங் கிடையாது. அரசுரிமையைத் துறத்தல் தகுதியான யோசனையாக எனக்குத் தோன்றவில்லை" என்று சொன்னான்.

காந்தன் சொல்லைக்கேட்ட கிழவரசன் முகங்கறுத்துப் பெருமூச்செறிந்து "மந்திரி, உன்னைப் புத்திசாலியென்று எண்ணியிருந்தேன். அவ்வபிப்பிராயத்தை இப்பொழுது மாற்றவேண்டியதாயிருக்கிறது. "புத்ராத் சதகுணம் புத்ரீ" என்பதை முற்றிலும் மறந்தாய்போலும். பெற்றவருக்குத் தான் பிள்ளையின் அருமை தெரியும். நீ எமது குமாரிகள் மூவரையும் இந்த ஸபைக்கு வரச்சொல். மருகப்பிள்ளைகள் இருவரும் அவர்களுடன் வரல்வேண்டும். பேரி, சேதி நாட்டரசர்களைப் பின்பு அழைப்போம்" என்றான். காந்தன் அந்தக்ஷணமே மூன்று பெண்களையும் மருமகப்பிள்ளைகளிருவரையும் ராஜஸன்னிதிக்கு அழைத்துவந்தான்.

லோஹிதன் தன் பெண்கள் மூவரிடத்திலும் மந்திரிகளிடத்தில் கூறியவாறு தன் கருத்தைத் தெரிவித்து ஒவ்வொருவரும் தன்னிடத்தில் வைத்திருக்கும் அன்பின் அளவைச் சொல்லவேண்டுமென்றான். முதற் பெண்ணாகிய கமலை சொல்லியதாவது:—

"பிதாவே, நான் தம்மிடத்தில் வைத்திருக்கும் பிரியத்தை என்னென்று சொல்வேன்? தம்மை என் கண்மணி என்பேனோ? என் பிராணன் என்பேனோ? வேறு எதறகுத் தம்மை ஒப்பிடலாமென்றறியாமல் என் புத்தி மயங்குகின்றது. தங்களைப்பாராத ஒவ்வொரு நிமிஷமும் நான் உயிரோடிருப்பதாக எண்ணேன். தம்மைப் பார்த்தும் ஒளியாத என் கண்கள் இருந்தென்ன, அவிந்தென்ன? தம்மை வழுத்தாத என் நாவைப்பிடுங்கி எறிந்துவிடுவேன். தமக்கு சிச்ருஷை செய்யாத கைகளை வெட்டி எறிவேன்" இவைபோன்ற கபடச் சொற்களைக் கிழவன் காதில் உரையேற்றினவுடன் கிழவன் மனமகிழ்ந்து தன் ராஜ்யத்தில் மூன்றிலொரு பாகத்தைக் கமலைக்கும் அவள் புருஷனுக்கும் புத்ர பவுத்ர பாரம்பர்யமாயும் ஆசந்திரார்க்கமாயும் அனுபவிக்கும்படி தத்தம் செய்தான்.

இரண்டாங்குமாரி நீலியை அழைத்து "உன் அந்தரங்கத்தை நீ சொல்வாயாக" என்று லோஹிதன் கேட்க, நீலி, "என் அருமை அப்பா, எனது அக்காள் சொல்லியவற்றை எல்லாங் கேட்டேன். நான் தம்மிடத்தில் வைத்திருக்கும் ஆசைக்கு அவள் ஆசை உரைபோடவுங்காணாது. தாமில்லாவிடில் உலகத்தில் சூரியன் உதயமாகாது: மழை பெய்யாது: மனிதருக்குச் சுகலேசமுமிராது: தம்மிடத்தில் நான் வைத்திருக்கும் அன்பே எனக்கு உணவையும் உயிரையும் தந்துவருகின்றது. தாமில்லாவிடின் இவ்வுலகம் எனக்கு இடுகாடே" என்றாள். அண்ணனுக்கு எட்டாதது தம்பிக்கு எட்டும் என்றாற்போல, நீலியின் பேச்சினால் முன்னிலும் அதிக திருப்தியடைந்த மூளைவரண்ட லோஹி

7

தன் தன்நாட்டில் இன்னொரு மூன்றிலொரு பாகத்தை நீலிக்கும் அவள் புருஷனுக்கும் கமலையைப்போல சாசுவத அனுபோகமாய் அளித்தான்.

கடைசிப்பெண் விமலையைக்கூவி "குழந்தாய், உன் தமக்கைமார்கள் பெற்ற பொருளளவு நீயும் பெறுவதற்கு என்ன சொல்லுகிறாய்?" என்று அரசன் வினவ, விமலை "பிதாவே, தாம் எனக்குத் தாயுமாயிருக்கின்றீர். என் குழந்தைப்பருவத்திலேயே என் தாயிறக்கத் தாமே என்னை வளர்த்து ஆதரித்துவந்தீர். புத்திரியானவள் பிதாவிடத்தில் எத்துணைபிரியம் வைப்பது ஞாயமோ அத்துணை பிரியந் தான் நான் தம்மிடத்தில் வைத்துளேன். அதற்கு அதிகமுமில்லை, குறைவுமில்லை. என் தமக்கைமார் தம்மையன்றி வேறொருவரிடத்தும் அன்பேவைக்கவில்லை என்றனரே. அவர்கள் எதற்குத்தான் கணவர்களை மணந்தனரோ? பெண்ணின் அன்பு பெற்றவரிடத்திற் பாதி, கட்டின கணவனிடத்திற் பாதியன்றோ? என் தமக்கைமார்களைப் போலத் தம்மிடத்திலேயே எல்லா அன்பையும் செலுத்துவதென்றால் நான் ஒருவரையும் விவாகம் செய்துகொள்ளேன். எவருக்கு நான் வாழ்க்கைப்படுகிறேனோ அவருக்கு என் அன்பிலும் கவலையிலும் சரிபாதி அளித்து மற்றொரு பாதியைத்தமக்கே அற்பிதஞ் செய்வேன். இதற்குமேல் எனக்குப் பேசத்தெரியாது" என்றனள்.

மூப்பின் கொடுமையால் மூதறிவிழந்த மன்னன் கண் சிவந்து பெருமூச்செறிந்து விமலையை நோக்கி, "வளர்த்த கிடா மார்பிற்பாய்ந்தாற்போல உன்னை இரவும் பகலும் இடைவிடாமல் பாதுகாத்து வந்த என்னிடத்தில் அரை

அன்பு வைத்தாயென்றாயே! உன்மனம் கல்லோ, மண்ணோ? முதிர்ந்தவயதில் நீ என்னைக் காப்பாற்றுவாயென்றல்லவோ எண்ணியிருந்தேன். உன் வாக்கை மாற்றினையானால் உன் அக்காள்களைப்போலச் சொத்துக்கொடுப்பேன்: அன்றேல் உனக்கு ஒன்றுங்கொடேன் என்ன சொல்லுகிறாய் இப்போது?'' என்று உறுக்கினான்.

இதைக்கேட்ட விமலை சற்றேனும் அஞ்சாமல் தன் பிதா லோஹிதனை நோக்கி, "அப்பா, பதார்த்தவாதி வெகுஜனவிரோதி என்பார்களே. அதன் உண்மை எனக்கு இப்போதுதான் விசதமாயிற்று. தமது வயிற்றிற் பிறந்து பொய்சொல்லவும் நா எழுமோ? மனத்திற்றோன்றியவற்றை வாக்கினாலும் வெளியிட்டேன். நான் சொன்னவை சொன்னவையே. சொன்ன சொற்களை மாற்றுதல் என்னாலாகாத காரியம். நுணல் தன்வாயாற் கெடுமென்பார். என் வாயால் நான் கெட்டால் கெடுகிறேன். ஸ்திரீதனம் இல்லாமற் போனாலென்ன? தம்முடைய பெண் என்னும் பெயர் எனக்கு மாறாது. அதுவே எனக்குக் கருந்தனம். வேறுதனத்தை இச்சித்திலேன்'' என்றாள்.

லோஹிதன் முன்னிலும், அதிக கோபாவேசமாய் மந்திரிகளை நோக்கி "விமலை இவ்வளவு இளம்பிராயத்திலேயே இத்துணை கன்னெஞ்சளாயிருப்பாளென்று அறிந்திலேன். இவள் நன்றிமறந்ததைப் பார்க்கும்படி என் ஆயுள் நீட்சியடைந்திருப்பதை நினைக்க மனம்நோகின்றது. நன்றி மறந்தவர்க்கு ஒன்றுஞ் செய்யலாகாது. விமலைக்குப் பொருள் ஒன்றுங்கொடேன். இந்த நிலைமையில் அவளை மணம்புரியச் சம்மதித்தவர் மணம்புரியட்டும். உங்க

ளில் ஒருவர் போய் பேரி, சேதி, அரசர்களை இங்கு அழைத்துவரட்டும் அவர்களிடத்தில் விமலையின் நடபடிக்கைகளைச் சொல்வோம். பொருளற்றபேதையைக் கலியாணஞ்செய்யச் சம்மதிப்பாருண்டாயின் எமக்கு ஆக்ஷேபமில்லை,'' என்றான்.

பேரி, சேதி நாட்டரசரிருவரும் அரசன் ஸன்னிதிக்கு வரவே, லோஹிதன் "அரசர்களே, நமது மூன்றாவது குமாரியை விவாகம்செய்ய எண்ணியிருக்கிறீர்களன்றோ? அவளுக்குக்கொடுக்க உத்தேசித்திருந்த நாடுகளைக் கொடுக்க நமக்கு இப்போது இஷ்டமில்லை. வெறுங்கையளை விவாகஞ்செய்வீராணுல் செய்து கொள்ளுங்கள். எமக்குத்தடை ஒன்றுமில்லை," என்றான்.

காசுமேல் கண்வைத்த பேரி நாட்டரசன் "மகாராஜாவே, தாம் மற்றைக் குமாரிகளைப்போலவே விமலையையும் நடத்துவீரென் றெண்ணியிருந்தேன். ஏழைப்பெண் என் அந்தஸ்துக்குப் பொருந்தாள். நான் விமலையைக் கலியாணஞ்செய்யேன். எனக்கு விடையளித்தல் வேண்டும்" என்று ஆத்திரமாய்ச்சொல்லிப் பரிவாரங்களுடன் தன் நாட்டிற்குப் புறப்பட்டான்.

சேதிஅரசன் லோஹிதனைநோக்கி "அரசனே, உமக்கு விமலையிடத்தில் இத்துணைகோபம் ஏன் வந்தது? மற்ற இருவரினும் விமலையிடத்தில் அதிக அன்பு வைத்திருந்தீரே. காரணஞ் சொல்வீராயின் என் தீர்மானத்தைச் சொல்வேன்" என்றான்.

சேதி அரசன் பேச்சைக்கேட்ட லோஹிதன் "விமலையை மற்றைப் பெண்களைவிட அதிக அருமையோடு நான்

வளர்த்துவந்தது வாஸ்தவம். பாம்பிற்குப் பாலூட்டி வளர்த்தால் வளர்த்தவனை அது கொல்லும். அவ்வாறே விமலை செய்தாள். எம்மிடத்தில் உனக்கு அன்பிருக்கிறதா என்று நான் கேட்க விமலை சொன்னதாவது:—தகப்பனிடத்தில் பெண் வைக்கவேண்டிய அளவு அன்புதான் உம்மிடத்தில் நான் வைத்துளேன். அதற்கு மேலுமில்லை குறைவுமில்லை. இது சரியா என்று யோசித்துப்பாரும்" என்றான்.

சேதி அரசன் "இதுதானு விமலையின் குற்றம்? எனக்குக் குணம் பெரிதேயன்றிப் பணம் பெரிதன்று. கற்புடை மகளிருக்கு இன்றியமையாதகுணம் விமலையிடத்திற்கண்டேன். அதுவே எனக்கு மகதைசுவரியம். கலியாணஞ்செய்துகொள்ள அனுமதி தருவீராயின் என் நாட்டிற்கு அப்பெண்மணியைக் கொண்டுபோய் விவாகத்தைச் சிறப்புடன் நடத்துவேன்," என்றான்.

லோஹிதன் "விமலை என் பெண்ணல்ல. எவருக்கு இஷ்டமோ அவர் அவளை இந்நாட்டைவிட் டழைத்துப் போகலாம். எனக்குத் தடையே கிடையாது" என்று வெறுப்பாய்ச்சொல்ல, சேதி அரசன் விமலையின் கையைப் பற்றி "விமலா, நீ பொருளைப் புருஷனிலும் பெரிதாயெண்ணினுயில்லை. நீயே எனக்குத் தக்கமனைவி, நாமிருவரும் சேதி தேசத்திற்குப் போவோம், வா," என்று கூறி அரசன் ஸன்னிதியிலிருந்து இருவரும் புறப்பட்டார்கள்.

விமலை தன் முன்னில்லாமற்போனது கிழவனுக்கு மனவெழுச்சியை •யுண்டாக்கிற்று. உடனே கமலை நீலா இருவரையும் அழைத்து "அருமைக் குழந்தைகாள்! பாவி விமலையின் நடைபடிக்கையைப் பார்த்தீர்களா? புருஷனைக்

கண்டவுடன் என்னைத் திரும்பிப்பாராமல் போய்விட்டாள். அவளையே நம்பியிருந்தால் மண் குதிரையை நம்பி ஆற்றில் இறங்கினவன் போலாவேன். உங்களால் நான் சரியாக ரக்ஷிக்கப்படுவே னென்பதில் ஐயமில்லை. விமலையின் பாகத்தை நீவிர் இருவரும் ஸமமாகப் பாகித்துக்கொண்டு உங்கள் புருஷர்களோடு ராஜ்யகாரியத்தைச் செவ்வையாய்ப் பார்த்துவாருங்கள். நான் கமலை வீட்டில் ஒரு மாதமும், நீலா வீட்டில் ஒரு மாதமுமாக இருந்து காலத்தைக்கழிப் பேன். நான் நூறுபேர்களை எப்போதும் எனனுடைய பரி வாரஜனங்களாய் வைத்துக்கொள்வேன். ராஜரீகத்துக்குப் பரிவாரமட்டிலாவது வேண்டியதன்றோ? இம்மட்டிற்றான் உங்களிடத்தில் நான் எதிர்பார்ப்பது," என்றான்.

கமலையும் நீலியும் அரசனிஷ்டப்படிச் செய்வதாக ஒத்துக்கொண்டார்கள்.

மந்திரிகளில் காந்தன் லோஹிதனை நோக்கி "மஹ ராஜ், தங்களுக்கு ஜரைவந்ததற் கடையாளங்கள் நரைதிரை மாத்திரம் அல்ல, புத்தியும் சற்று மழுங்கிப்போயிருக்கிறது. கமலையும் நீலியும் விரியன் பாம்புக்குட்டிகள். அவர்களை நம்பினால் மோசம்போவீர்கள். விமலை ஸத்புத்ரி: அவளை வெறுங்கையளாய் விட்டுவிட்டீர்கள். அதனாலென்ன? அவளிருக்கும் நாடு லக்ஷ்மீகரமாயிருக்கும். நான் இப்போது சொல்வது கர்ணகடூரமாய்த்தானிருக்கும். வாஸ்தவம் பின்னால் தெளிவா யேற்படும். கேடுவருமுன் மதிகெட்டு வருமென்பது தாமறியாததன்று தம்மிடத்தில் மிகுந்த காலம் சேவகஞ்செய்து தம்முடைய அன்னத்தையும் புசித்த நான் ஹிதத்தைச் சொல்லவேண்டியது கடமை

யென்றெண்ணி இந்த ஸன்னிதியிற் பேசத்துணிந்தேன். தமது சித்தம் என்பாக்கியம்" என்று சொன்னான்.

லோஹிதன் காந்தன் சொன்ன கடுஞ்சொற்களைப் பொறுகி "அடா, பாதகா, உண்டவீட்டிற்கு இரண்டு நினைக்கிற துஷ்டா, என் கண்மணிகள்போன்ற கமலையையும் நீலாவையும் நிந்தித்துப்பேசின உன் நாவை அடியோடு அறுத்தாலென்ன? அதனால் நானடையும் பயனொன்றுமில்லாதபடியால் உன் நாவைச் சும்மாவிட்டேன். உன்னைப் போன்ற பாவிகளை இந்நாட்டிற்சிலதசையோடுவைத்திருத்தல்பெரும்பிழையாகும். ஒருவாரத் தவணைகுறித்திருக்கின்றோம். இதற்குள் நீ நமது நாட்டைத்துறந்து வேறு நாட்டிற்குப் போதல்வேண்டும். எட்டாவது நாள் உன் தலை இந்நாட்டில் காணப்படுமாயின் அதைச் சேதித்து விடுவோமென்பதை அறிவாயாக" என்று மூர்க்கமாய்ப்பேசினான். காந்தன் லோஹிதனைத் தண்டமிட்டு வெளியில் வந்துவிட்டான்.

விமலை சேதி நாட்டுக்குப் போகுமுன் தன் தமக்கைமார்களிடத்தில் விடைபெறும்பொழுது, "அக்காள்களே, நம்முடைய பிதா வயதுசென்றவர். அவரை நீங்களிருவரும் கருத்துடன் பாதுகாப்பீரென்று நம்பி உங்களிடத்தில் ஒப்புவித்துப் போகிறேன்" என்று உருக்கத்துடன் சொன்னாள். இச்சொற்களைக் கேட்டவுடன் கமலையும் நீலியும் கமலையின்மேற் சீறி "எங்களுக்குப் புத்திசொல்லவந்தாயோ! நன்றாயிருக்கிறது! செய்யவேண்டியது என்னவென்று நாங்கள் அறிவோம். உனக்குக்கிடைத்திருக்கிற புருஷனைத் திருப்திசெய்துவைத்தாற் போதும். உன் சுபாவத்துக்குத்

தக்கபடித்தான் உனக்குப் 'புருஷனும் அமைந்தான். உன் வேலையைப்பார்.'' என்று அதட்டிச் சொன்னார்கள்.

தமக்கைமார் இருவரும் மிகுந்த கபடிகள் என்று விமலை அறிவாள். கிழவன்பாடு திண்டாட்டமாய்விடுமே யென்று மனமேங்கிப் புருஷனோடு சேதி நாட்டிற்குப் போய் விட்டாள்.

முதல் மாதத்தை லோஹிதனும் அவன் பரிவாரமும் கமலையின் அரண்மனையில் கழிப்பதாக உத்தேசித்து வந்தார்கள். இரண்டு மூன்று நாள்வரையில் கிழவனுக்கும் அவன் பரிவார ஜனங்களுக்கும் உபசாரங்கள் ஏகதேசம் சரியாகவே நடந்ததென்னலாம். அதற்குள், கிழவன் தனக்கென்று வைத்திருந்த மகுடத்தை ஏதோ சாகசக்கியஞ் செய்து கமலை பிடுங்கிக்கொண்டுவிட்டாள். விருந்தும் மருந்தும் மூன்று நாளென்பார்களன்றோ? நாலாநாள் முதற்கொண்டு கிழவனையும் பரிவாரத்தையும் உபேக்ஷை செய்வதற்கு ஆரம்பித்தார்கள். கிழவன் கமலையைப் பார்த்துப் பேசவேண்டுமென்றால் தலைவலி ஜ்வரமென்று நடித்து அவன் எதிரில்வரமாட்டாள். தன் சேவகர்களுக்கும் ரகஸ்யத்தில் சொல்லிவைத்துக் கிழவனுக்காவது பரிவாரத்துக்காவது சொன்னபடி கேட்கவேண்டாமென்றும் ஏற்பாடு செய்திருந்தாள். பெற்ற தகப்பனிடத்தில் ராஜ்யத்தில் படிபாதியைப் பெற்றுக்கொண்ட பெண்ணே இப்படிச் செய்வாளாயின் அன்னியரிடத்தில் அன்பை எதிர்பார்ப்பதெப்படி? லோஹிதனுக்கும் தன் பெண் செய்யும் வஞ்சனைகள் சிறிது சிறிது புத்தியில்பட்டன. தன் மௌட்டியத்தாலும் பிடிவாதத்தாலும் வந்தகேடானதால் மெல்லவுங் கூட

வில்லை, சொல்லவுங் கூடவில்லை. தன் ஆயுதமும் தன் கைப்பொருளும் பிறன்கையிற் கொடுக்கும் பேதை மனி தரிற்பதரென்பது தெளிவா யேற்படவில்லையா ?

வாஸ்தவத்தில் அந்தக்கரண சுத்தியுடன் எந்தப் பொருளினிடத்தில் நாம் விசுவாஸம் வைத்திருக்கின்ருே மோஅந்தப்பொருள் ஒவ்வொருஸமயம் நமக்கு நோகும்படி எதையாவது செய்தாலும் அதனிடத்தில் நமக்குப் பிரியம் குன்ருது. உண்மையில் அன்பில்லாதவர் வெளிக்கு எவ்வ ளவு அன்பு பாராட்டினுலும் அவரிடத்தில் நமக்கு அன்பு ஜனிப்பதும் கிடையாது. உப்பொடு நெய் பால் தயிர் பெய்தடினும் கைப்பருத பேய்ச்சுரக்காய் போன்ற குண முள்ளவர்கள் உலகத்தில் பலருண்டு. இவ்வகையினர் திருந்தி நேர்வழிக்கு என்றும் வாரார். கமலைக்குக் கணக்கில் லாத பொருளைக் கிழவன் கொடுத்தும் அவளுடைய ஸகஜ மான துர்மார்க்கமானது எள்ளளவும் மாறவில்லை. காந்தன் லோஹிதனிடத்தில் நிஜமான பிரீதி வைத்தவன். அரசன் கோபத்தினுல் காந்தனை ராஜ்யத்தை விட்டு ஓடிப்போக வேண்டுமென்று கட்டளை பிறப்பித்தான். லோஹிதன் தன் இரண்டு குமாரிகளால் மிகுந்த கஷ்டத்தை அனுபவிப்பா னென்று நிச்சயமாயறிந்திருந்த காந்தன் தன உயிரினும் அரசனுடைய க்ஷேமம் பெரிதென்றெண்ணி மாறுவேஷம் பூண்டு கேயன் என்று புதிய பெயர் தரித்து லோஹித னிடத்தில் சேவகனுகி வந்து அமர்ந்தான். குரல்முதற் கொண்டு எல்லாவற்றையும் காந்தன் மாற்றிக்கொண்டு விட்டபடியால் லோஹிதனுக்காவது இதாருக்காவது கேயன் காந்தனேயென்பது சிறிதும் புலப்படவில்லை.

8

உள்ளன்பு உயிரையும் துரும்பாகப் பாவிக்கின்றதன்றோ? காந்தனும் மற்றவருடன் கமலை வீட்டிலேயே இருந்து வந்தான்.

ஒருநாள் கமலையின் உக்கிராணக்காரனைத் தருவித்து லோஹிதன் யாதோ காரியம் சொன்னான். ராஜாவிடத்தில் பேசவேண்டிய முறை பிறழ்ந்து உக்கிராணக்காரன் அவமரியாதையாப் பேசினதைச் [illegible]ந்தன் மிகுந்த கோபங்கொண்டு உக்கிராணக்கா[illegible]த்துச் சாக்கடையில் தள்ளினான் யஜ[illegible] நடந்த உக்கிராணக்காரன் கஷ்டத்துக்கு[illegible] யாயமார்க்கத்தில் பிரவேசிப்பவருக்குத் தண்டனை யில்லாமற் போகுமா?

ராஜர்கள் தமது அரண்மனையில் பொழுதுபோக்குக்காக விகடன் ஒருவனை வைத்திருப்பதுண்டு. லோஹிதன் ராஜ்யத்தைப் பெண்களுக்குக் கொடுத்தான பின்னும் விகடனைத் தன்னிடத்திலேயே வைத்திருந்தான். விகடனும் கமலை வீட்டில் அரசனுடைய பரிவாரங்களில் ஒருவனாக உண்டு களித்துவந்தான். லோஹிதன் செய்த பெரும்பிழையைப் பலவாறு கமலையின் முன்னிலையிலேயே விகடன் பரிகசித்துப் பேசுவான்.

[விகடன் அரசனை "மாமா" என்று சொல்வது வழக்கச் சொல்.]

விக.—மாமா, எனக்கு நீர் ஒரு கோழிமுட்டை கொடுத்தால், நான் உமக்கு இரண்டு மகுடந்தருவேன்.

லோ.—ஒரு கோழிமுட்டைக்கு இரண்டு மகுடமா?

விக.—சொல்வேன் கேளும். கோழிமுட்டையிலும் கேசங்களில்லை. [வழுக்கைத்தலை யென்றபடி] உம்முடைய மகுடத்தைப் பெண்ணு ' ' கொடுத்துவிட்டீர். வழுக்கைத் தலை மிகுந்தது. அ வதற்கு ஒன்றுமில்லை. உம் முடைய தர்மம் த . . நான் புதிய மகுடங்கள் . ய்வேன். கோழிமுட்டையின் உட்புறத்திலிருக்கும் ஸதை எடுத்துக்கொள்வேன். இரண்டு ஓட்டையும் உமக் குத்தருகிறேன்.

லோ.—எனக்கு ஓடுதானு தருவாய்.

விக.—நீரே ஓட்டை எடுத்துக்கொண்டு விட்டீர். இனி இங்கிருந்து ஓட்டமெடுக்கவேண்டியதுதான். குயிற் குஞ்சு பெரிதானல் காக்கையின் தலையைத் துண்டிக்கு மன்றோ ? அந்தக் கதிதான் உமக்கு வந்தது.

லோ.—எனக்கு என்னகதி வந்துவிட்டதென்கிருய்?

விக.—நீர் சகதியில் விழுந்தாயிற்றே.

லோ.—நீ துஷ்டப்பேச்சுப் பேசுகிருய். உன்னைச் சவுக்காலடிப்பேன்.

விக.—கண்ணில்லாதவனைக் குருடனென்றாற் கோ பந்தான் வரும். விரல் உரலானற்போல பெற்றபெண் உமக்குப் பெற்றதாயாய்விட்டனள். உமக்குச் சிலநீதிகள் கற்பிக்கலாமென்றிருக்கிறேன். கேட்க இஷ்டமோ ?

லோ.—சொல், பார்ப்போம்.

விக—கைப்பொருள் முழுமையும் காட்டாதே
காட்டினற் கள்வர் அதைக் கொண்டுபோவர்.
தெரிந்ததை முற்றிலுஞ் சொல்லாதே

சொன்னால் எல்லோரும் வைரிஆவார்.
வருவாய்க் குட்பட்டுச் செலவுகள்செய்
தருவார் தரித்திரத்தில் எவருமிலர்.
கள்ளை மறுத்துக் களவையுமறந்து
துள்ளாமற் காயத்தைச் செம்மையில்வை.

லோ.—இது என்ன பண்டாரப்பாட்டாயிருக்கிறது.

விக.—சுரூபத்தைக் காட்டிவிட்டீரே. அதற்குத்தானே முன்னமேயே கேட்டுக்கொண்டேன். சற்றுமுன் பண்டாரி உம்மை அலக்ஷ்யஞ்செய்ததை மறந்தீரே. பண்டாரமும் உமக்குச் சொந்தமாயிருந்தால் நீர் இவ்வாறு நிண்டாட மாட்டீரே.

லோ.—பரிகாசம் போதும், நிறுத்து. இன்னொரு முறை ஆகட்டும்.

விக.—மாமாவாக இருந்து மாமாபிள்ளை [அம்மான் சேய் = அம்மாஞ்சி] ஆய்விட்டதனாற்றான் இவ்வளவுசொன்னேன். எனக்குநாடிருக்கு ஓடிருக்கு, உமக்கிரண்டுமில்லை.

இவ்விதமாகக் கமலையின் முன்னிலையிலேயே கிழவனையும் அவன் செய்த காரியத்தையும் ஸமயம் வாய்த்த போதெல்லாம் விகடன் வேடிக்கைபண்ணுவான். கமலை உள்ளத்தில் மிகுந்த கொதிப்படைந்து எப்படியாவது கிழவனைத் தன் வீட்டிலிருந்து துரத்திப்போட வேண்டுமென்று தனக்குள் தீர்மானஞ்செய்தாள்.

ஜாடைமாடையாக லோஹிதனை அலக்ஷ்யம் செய்தது போதாதென்றெண்ணிக் கமலை ஒரு நாள் தன் பிதாவினிடத்தில் வந்து "பிதாவே, தம்முடைய பரிவாரங்கள் என்

அரண்மனையிற் செய்துவருகிற அழிம்புகள் வாயினுற் சொல்லவழங்கா. வயிறாரச் சோற்றையும் கள்ளையுமுண்டு கூத்தாடிக்கொண்டு ஆரவாரஞ்செய்தபடியே இருக்கிறார்கள். நானாவது என் வேலைக்காரராவது ஒரு நிமிஷமும் கண்களை மூடக்கூடவில்லை. பரிவாரங்களை வெளிப்படுத்திவிடும். உமக்கு ஸமவயதாயிருக்கிற வயோதிகர்கள் சிலரை நீர் பக்கத்தில் வைத்துக்கொள்வதில் எனக்கு ஆக்ஷேபமில்லை. இந்தப் பெரியகூட்டத்திற்கு ஆகாரம் தேடிப்போடுவது எனக்கு மிகவும் கஷ்டமாயிருக்கிறது" என்று வெறுத்துச் சொன்னாள்.

லோஹிதனுக்கு ஆத்திரம்பொங்கி "அடி பாவி, என் பரிவார ஜனங்கள் எல்லோரும் உயர்குலத்தவர்: மரியாதை தெரிந்தவர்: சோற்றுள்கள் என்று சொல்ல உனக்கு எப்படித் துணிவுபிறந்தது? ராஜ்யத்திற் பாதியை உனக்குக் கொடுத்தேனே! அதற்குப்பிரதியாக ராஜசின்னங்களும் எனக்குக் கூடாதென்கின்றாயோ? உன் முகத்தை இன்னொருமுறை எனக்குப் பார்க்க இஷ்டமில்லை. இப்பொழுதே நானும் என் பரிவாரமும் நீலாவின் அரண்மனைக்குப் போகின்றோம். அவள் உன்னைவிடப் பிரியமாயிருப்பாள். எந்த அபராதத்தையும் பொறுத்தல் எளிது. செய்ந்நன்றி கொன்றவரை மன்னித்தல். முடியாதகாரியம் நன்றிமறந்த நாசகாரி! உன்வயிற்றில் பிள்ளைகளே பிறக்காமற் போகக்கடவது! அப்படியன்றிப் பிள்ளை உனக்குப் பிறக்குமாயின் நீ எனக்குச்செய்த கெடுதியை அதுவும் உனக்குச்செய்யும் பாம்பின் விஷத்திலும் உன்வாயிற் சொல் கொடுமையாயிருக்கிறது" என்றான்.

கமலையின் புருஷன் ஸாது: அவன் மாமனிடத்தில் வந்து "ஐயா, தாம் கோபித்தலாகாது: நான் தமக்கு எவ்வகை அவமரியாதையும் செய்யச் சொன்னவனல்லன். என்மேற் கோபங்கொள்ளலாகாது," என்று சொன்னான்.

கோபத்தினால் கட்புலனும் செவிப்புலனும் தத்தம் தொழிலைச்செய்யாமையால் கமலையின புருஷன் சொன்னவற்றை லோஹிதன கவனியாமல் தன்சேவகர்கள் நீலாவின் வீட்டிற்கு உடனே பிரயாணஞ் செய்யவேண்டுமென்று கட்டளையிட்டான். கமலை எந்தமண்ணாற் செய்யப்பட்டிருந்தனளோ அதேமண்ணாற்றான் நீலியும் செய்யப்பட்டிருந்தாள். பாம்பின்கால் பாம்பறியுமென்றபடி கமலையின் உட்கருத்தை நீலியும் நீலியின் அந்தரங்கத்தைக் கமலையும் செவ்வையாயறிந்திருந்தார்கள். ஆகவே கிழவன் குளிக்கப் போய்ச்சேற்றைப்பூசிக்கொண்டுவருவானென்பதுநிச்சயம்.

கமலை தன்வீட்டில் கிழவனைப் பரிபவப்படுத்தினது போதாதென்று தன் உக்கிராணக்காரனிடத்தில் ஒரு கடிதத்தை நீலிக்கு அனுப்பிக் கிழவனுக்கு இடங்கொடுக்கக் கூடாதென்று தெரிவித்தாள். லோஹிதன் புதியசேவகன் கேயன் [காந்தன்] கையில் ஒரு கடிதத்தைக்கொடுத்து நீலிக்குத் தன்வருகையை முன்னரே தெரிவிக்கும்படி அனுப்பினான். காந்தன் நீலி வீட்டுவாசலில் வந்த தருணம் கமலையின் உக்கிராணக்காரன் அவள் கடிதத்துடன் லோஹிதன் வந்தஸமயமும் ஒன்றாயிருந்தது. காந்தன் இதற்குமுன் தன்னிடத்தில் அவமரியாதையாய் நடந்ததற்காக இதே உக்கிராணக்காரனைக் காலாலுதைத்துச் சாக்கடையில் தள்ளியிருந்தான். அரசனுக்கு ஏதோ கெடுதிசெய்வதற்கு வந்தா

னென்று எண்ணிக் காந்தன் உக்கிராணக்காரனைச் செவ்வை யாய்ப் புடைத்தான். யுத்தவீரனை காந்தனை எதிர்த்துச் சண்டைசெய்ய ஏலாத கமலையின் சேவகன் நீலியிடத்திற் போய்க் காந்தன் தனக்குச்செய்த கேட்டைத் தெரிவிக்க, நீலியும் அவள் புருஷனும் காந்தன் அரசனுடைய தூதன் என்பதைச் சிறிதும் எண்ணமல் ஈனசாதிக் குற்றவாளி களைப்போலக் காந்தனை அரண்மனை வாயலிலிருந்த தொழு மரத்தி லடித்துவைத்தார். ராஜதூதனுக்கு நடந்த உபசாரத் தைப் போற்ருன் ராஜனுக்கும் நடக்குமென்பது விசத மாகும்.

சிறிது நேரத்திற்கெல்லாம் லோஹிதனும் அவன் பரி வாரஜனங்களும் நீலியின் அரண்மனைவாயிலில் வரச், காந் தன் தொழுவிலிருப்பதைக் கண்டு மனம் வருந்தி உள்ளே சென்றார்கள். லோஹிதன் நீலியை நேரிற்பார்க்கவேண்டு மென்று சொல்லியனுப்ப, நீலி முன்னிரவு முழுதிலும் தூக்கமில்லாமல் பிரயாணமாக வந்திருந்தமையால் உடல் நொந்திருப்பதாயும் தன்பிதாவை நேரில்வந்துபார்க்க முடி யாதென்றும் கண்டிப்பாய்ச் சொல்லிவிட்டாள். லோஹி தன் பிடிவாதஞ்செய்யக் கமலையும் நீலியும் கைகோத்துக் கொண்டு பிதாவின்முன் வந்து நின்றார்கள். கமலையைக் கண்டவுடன் கிழவனுக்கு ரவுத்ராகாரமாகக் கோபம் பிறந் தது. தன் வீட்டிற்செய்த பரிபவம் போதாதென்று தங்கை வீட்டிலும் கிழவனுக்குத் துன்பமிழைக்கக் கமலை வந்து விட்டாளேயென்று மனம் தபித்தது. செய்தீவினையிருக்கத் தெய்வத்தை நொந்தக்கால் எய்தவருமோ இன்பம்? பெற்ற பெண்களே உற்றபகைஞராஞரென்றால் செய்தபாவத்தி

னளவு எம்மட்டாயிருக்கும்? நீலி லோஹிதனை நோக்கி, "பிதாவே, நீர் கமலையின் வீட்டுக்கே திரும்பிப் போதல் வேண்டும். உம்முடைய பரிவாரத்தில் பாதியை அவரவர் வீட்டிற்கு அனுப்பிவிடும். நீர் அவளுக்குச்செய்த அபராதத் திற்கு அவளை மன்னிப்புக் கேட்டுக்கொள்ளவேண்டும். உமக்கு வயதாய்விட்டது; சுயமாக உமக்குச்சரியான யோசனை ஒன்றுந்தோன்றாது. பிறர் சொல்லுகிறபடி கேட்க வேண்டியவராயிருக்கின்றீர். உம்மைவிடக் கமலை புத்தி சாதுரியமுடையவள் என்பதில் எனக்குச்சந்தேகமேகிடையாது" என்றாள்.

பிதா பெண்ணின் காலில் வீழ்ந்து சோறும் துணியும் இரத்தல் மிகவும் இழிவான காரியமாக லோஹிதனுக்குத் தோன்றினமையால், கமலையின் கிருஹத்திற்குத்தான் திரும்பவும் போவதில்லை யென்றும் நீலாவிடத்திலேயே இருப்பதாகவும் தீர்மானஞ்செய்ததை நீலியிடத்திற்சொன்னான். பின்னும் கிழவன் "நீலா, என் தங்கமே, கமலையின் கடும் பார்வையைப்போல உன் கண்களில்லை. நீ பிரியமாயிருப்பாய் என்று எனக்குத் தோன்றுகின்றது. பரிவாரத்திற் பாதியைப் பறிகொடுத்துப் பாதகி கமலையின் வீட்டிற்குத் திரும்பிப் போதலில் நான் சிறிதேனும் இஷ்டப்படவில்லை. நீ கிருபை செய்யாத பக்ஷத்தில் ஸ்திரீயாத பெறாத விமலை புருஷனிடத்திற்போய் உண்ணச்சோறுமான உடுக்கத் துணியும் யாசிக்கிறேன்" என்று கண் மழைபோலப் பெருகச் சொன்னான்.

நீலி மனம் கல். அது சற்றேனும் கமலாமல் தந்தையை வனைப்பார்த்து "உமக்கு ஐம்பது ஆட்

இருப்பானேன்? இருபத்தைந்து போதாதோ?" என, லோஹிதன் "அம்மா, கமலா, நீ ஐம்பது பேர்களை வைத்துக்கொள்ளலாமென்றாயே. நீலியின் அன்பைப்போல உன்னது இரட்டிப்பாயிருக்கின்றதே. உன்னுடன் வந்து விடுகின்றேன்," என்று சொல்லக் கமலை "உமக்கு ஆள்கள் எதற்கு? என்னுடைய வேலைக்காரர் உமக்கு வேண்டியவற்றைச் செய்யமாட்டார்களா? சோற்றுக் கூட்டம் என் வீட்டில் வேண்டவே வேண்டாம். நீலாவுடைய ஆட்களுமிருக்கிறார்கள் போதும் போதாதற்கு" என்று துடிப்பாய் மறுமொழி சொன்னாள்.

குடை நிழலிருந்து குஞ்சர மூர்ந்த பேரரசனுக்குப் பக்கத்தில் ஒரு ஆள்கூடச் சொந்தமாய் இருத்தல் ஆகாதென்று விதித்த நன்றி கெட்ட பெண்களின் நடபடிக்கையை யாதென்று சொல்வது? பரிவார ஜனங்களால் பெருமையடைகின்றோமென்பதல்ல. கோடிகோடியான பிரஜைகள் தினந்தோறும் தன்னை வழிபட்டுத் தன் இஷ்டப்படி நடந்துவந்ததை அனுபவித்த அரசனுக்கு சிச்ருஷை செய்ய ஏவலாள் ஒருவன்கூட இருத்தலாகாதென்று ராஜ்யத்தை முற்றிலும் கைப்பற்றின பெண்கள் சொன்னது காதிற்பட்டவுடன் லோஹிதன் சித்தம் கலக்கமுற்றது; பித்தர்கள் போலப் பேசினான்; பெண்களுக்குக்கொடுஞ் சாபம் கொடுத்தான். வாயினின்று பிறந்த சொல் இன்னதென்றே? அவனுக்குத் தெரியவில்லை.

பரிவாரஜனங்கள் நீலி அரண்மனைவாயிலில் நிற்கவுட்புறத்தில் லோஹிதனுக்கு நடந்த ஸம்பிரமங்களைச்சொன்னோம். பெண்களின் முகாவலோகனம் செய்வதில்லை

யென்று வெளியில் வந்துபார்த்து ஜனங்களிடத்தில் நடந்தைதச் சொல்ல அவர்களெல்லாம் தத்தமிடங்களுக்குச் சென்றார்கள். மிகுந்தது மூன்று பேர்— லோஹிதன், விகடன், காந்தன் ஊழிக்காலம் போல மழையுங் காற்றும் இடியும் வந்தன. உலகம் முழுமையும் பேரிருளாற் சூழப்பட்டிருந்தது. காற்று சதையைத் தொளைத்தது. மழைச் சாரல் உடம்பில் அம்புபோற் பாய்ந்தது. கிழவனும் மற்ற இருவரும் மழையில் நிற்கையில் கமலையும் நீலியும் சற்றேனும் மனமிரங்காமல் "பிடிவாதத்தால் பிறக்கும் கஷ்டத்தைப் பிடிவாதஞ் செய்பவர் அனுபவித்தல் நியாயம். அதற்கு நாம் செய்யக்கூடியதொன்றுமில்லை" யென்று சொல்லிக் கொண்டு உள்ளே போய்விட்டனர்.

நீலி வீட்டு வாசலிலும் நிற்றல் கூடாதென்று மூவரும் கிளம்பிவிட்டார்கள். கண்ணிற் கெட்டின தூரம்வரையில் தங்கி இருக்க மரத்தின் நிழல்கூட இல்லை. குளிர்ந்த காற்றுப் பல்லைக் கிட்டச்செய்தது. பாவி மகன் லோஹிதன் பட்ட துயரம் பகரொணாது. காந்தன் "மகாராஜா, தாம் இந்த மழையில் நனைந்து கஷ்டப்படுவது மிகுந்த துன்பமாயிருக்கின்றது. ஒரு குடிசையில் சற்றுப் புகுந்து மழை ஓய்கிற வரையில் ஒதுங்கி இருப்போம், வாருங்கள்," என்றழைக்க, லோஹிதன் "போடா, ஒன்றுந் தெரியாதவனே, நன்றி மறந்த பிள்ளைகளால் மனம் புண்ணாகுமளவில் ஆயிரத்திலொரு பங்குகூட இந்தக் காற்றும் மழையு உடலுக்கு வருத்தத்தை யுண்டாக்கவில்லை. மனம் ருத்தத்தை அடைந்திருக்கும் காலல்லவோ உட உணர்வோம். நன்றி கெட்ட மக்களினும் ம

குரூரியல்ல,'' என்றான். தாடிபற்றி எரியும்பொழுது புகைச் சுருட்டுக்கு நெருப்புக் கேட்பவன்போல விகடன் இந்த ஸமயத்திலும் லோஹிதன் புத்தி ஹீனத்தால் கைப் பொருளை யிழந்து கஷ்டப்படுவதைப்பற்றிப் பரிகாசஞ் செய்துகொண்டேயிருந்தான். விகடனிடத்தில் கிழவன் கோங்கொள்ளுக றதேயில்லை.

காந்தன் அடுத்தடுத்துக் கெஞ்ச, லோஹிதனும் மற்ற இருவரும் அங்கிருந்த ஓர் சிறு குடிசையண்டை போனார் கள். விகடன் முதலில் உள்ளேபோய்ப் பார்த்துவிட்டு அதிற் பிசாசு ஒன்று இருக்கிறதென்று அஞ்சி வெளியில் வந்தான். உள்ளிருந்தவன் பேயுமல்லன், பிசாசுமல்லன்; ஒரு பித்தன்; உடல் முழுவதும் மறைக்க வஸ்திரங்கூட இல்லாதவன்; பார்வைக்குப் பிச்சைக்காரன் போலுமிருந் தான். அவனை லோஹிதன் பார்த்தவுடன் 'உன் பெண் களுக்குக் கைப்பொருளைக் கொடுத்து இந்தக்கதி உனக்கு வந்ததோ?'' என்று கேட்டான். கேட்ட கேள்விக்குச் சரியான உத்தரஞ் சொல்லாமல் பிச்சைக்காரன் எதையோ பிதற்றிக்கொண்டிருந்தான்.

காந்தன் தன் யஜமானுக்குச் சித்தபிரமை வந்ததென் றும் அதற்கு முக்கியகாரணம் பெற்ற.பெண்களின் கொடு மை யென்றுமறிந்து தன்னூருக்கு லோஹிதனை அழைத் துப்போய் அங்கு தக்கசேவகர்களை ஏற்படுத்தி வைத்தான். கிழவனுக்கு ராஜோபசாரங்கள் காந்தனுடைய ஏவலாட் ரற் செய்யப்பட்டு வந்தன. காந்தன் உடனே சேதி புறத்திலிருந்துச்சென்று விமலையின் புருஷனிடத்தில் கமலை னும். டசெய்த கொடுமைகளையும் அவற்றால் லோஹி

தன் சித்தபிரமை யடைந்திருப்பதையும் தெரிவித்தான். விமலையின் கணவன் ஒரு பெருஞ்சேனையுடன் தன் மனை வியை விடபிக்கு அனுப்பினான். விமலை விடபிக்கு வந்த வுடன் பிதா லோஹிதனைப் பார்க்க விரும்பினாள். வைத் யர்கள் அந்த ஸமயம் லோஹிதனை விமலை பார்த்தால் அவ னுக்குத் துக்கம் அதிகரித்துப் பிராணச்சேதம் வருமென்று சொன்னார்கள். விமலையின் நிலைமை பரிதபிக்கத் தக்கதா யிருந்தது.

இரண்டொரு நாள் சென்றபின் விமலை தன பிதா வைப்பார்க்க வந்தாள். அந்த ஸமயம் விமலையின் மனமும் லோஹிதனுடைய மனமும் இருந்தநிலையை என்னவென்று சொல்லுதல் கூடும்? வயது முதிர்ந்த பிதா பட்டபாடுகளை நினைக்க விமலையின்மனம் புண்ணாகிக் கண்ணும் கண்ணீரு மாக நின்றாள். பரமஸாத்வியாகிய விமலையைத் தான் படுத் திவைத்த பாட்டை நினைந்து லோஹிதன் மிகுந்த துக்கத் தையடைந்து நாவெழாமல் பெண் விமலையைப் பார்த்து விம்மி விம்மி அழுதான். கிழவன் விமலையைப் பார்த்து "விமலா நானுனக்குப் பெருங்கேடிழைத்தேன், நீ என்னை மன்னித்தல் வேண்டும். உனக்கு நான் செய்த அபராதங் களை நீ பொறுத்தல் அரிது, அரிது" என்று கெஞ்சினான். விமலை பிதாவை நோக்கி, "அப்பா, நீர் என்னை மன்னிப் புக் கேட்கலாகாது. உம்மை மழையிலும் காற்றிலும் வெளி யே நிற்கும்படி விட்ட என் தமக்கைமார் செய்த கொடுமை யை நினைக்க என்மனம் வருந்துகின்றது. நீர் சுகமாயிருத் தலைப் பார்ப்பதில் மாத்திரம் எனக்குச்சந்தோஷம். றையும்பற்றி நீர் கவலைப்படல் வேண்டாம். என்னை

வற்றை என் கணவன் உதவியால்செய்ய ஆயத்தமாயிருக்கிறேன். கவலையே உமக்கு வேண்டாம். உமது சித்தங்கலங்கி நிற்றலைப்பார்க்க எனக்குத் துக்கமாயிருக்கிறது" என்று உறுதி சொன்னாள். வைத்தியர்கள், விமலை, ஏவலாட்கள் எல்லோருஞ்சேர்ந்து பராமரித்து வந்தபடியால் லோஹிதன் சித்தந்தெளிவுற்றுப் பழைய நிலைமைக்கு ஒருவாறுவந்தான்.

கமலை நீலி இருவருடைய ஸமாசாரத்தைச் சிறிது சொல்வோம். "அரசன் அன்று கொல்லும்; தெய்வம் நின்று கொல்லும்" என்று ஒரு பழமொழி உண்டு. அதனுண்மை இவ்விரண்டு ராக்ஷஸிகளுடைய சரித்திரத்தால் வெளியாயிற்று. பெற்ற பிதாவினிடத்தில் விசுவாஸம் கொஞ்சமேனும் வைக்காத பாதகிகள் தங்கள் புருஷர்களிடத்தில் அன்பு வைப்பார்களோ? நீலி தன் புருஷனைக் கொன்றுவிட்டு ஒரு சோரபுருஷனை மணம்புரிய எத்தனித்தாள். கமலையும் அவனிடத்தில் காமுற்றவளாயிருந்தபடியால் நீலிக்கு விஷங்கொடுத்துக் கொன்றாள். கமலையின் கணவன் இதையறிந்து அவளைக் கடுஞ்சிறையில் வை[த்]தான். மானக்குறை வந்ததைக்கண்டு கமலை தற்கொ[லை] புரிந்தாள். பிதுர்துரோகம் வீண்போகவில்லை.

சோரபுருஷன் என்று மேலே சொன்னோமே அவன் ஒரு அவிசாரி மகன். பிதாவை ஏமாற்றி ஔரஸ புத்திரனுக்குச் சொத்துக்கள் கிடைக்காமற் செய்து பிதாவையும் காட்டைவிட்டோடும்படி செய்தவன். கமலையும் நீலியும் இறக்குமுன் தம்முடைய சேனைகளுக்குத் தமது சோரபு[ருஷன்] புறத்தனையே தளகர்த்தனாக நியமித்திருந்தார்கள். இந்தத் [தள]னும். விமலையின் சேனையைத்தாக்கி ஜயம்பெற்றான்.